
நகரத்தார்



நகரத்தார்

திங்கள் இதழ்

61. D, உசுமான் சாலை - சென்னை-17.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய புரட்டாசி * செப்டம்பர் - 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர்
புலவர்நாகசண்முகம்

பரிந்துரையாளர்
எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு ஆறு

அடுத்த இதழில்

ஆசிரியர் எழுதும்

பழநிமலைக் காவடி

தொடர்கதை தொடங்குகிறது

நினைவுபடுத்துகிறோம்

மாணிக்கக் கேள்விக்கு உரிய கார்த்திகைத் திங்கள் 30ஆம் நாள்.

கேள்வி

வான் பொய்ப்பினும் வையத்து நீதிகள் பொய்ப்பினும் தேன் கசக்கினும் தெள்ளமுது நஞ்சு ஆயினும் தாம் பொய்யாத தவ வலிமை மிக்கவர் வசிட்டர்.

ஆய்ந்து தேர்ந்த அறிவின் மிக்கவரான அவர்தான் இராம பிரானது முடிசூட்டு விழாவிற்கு நாள் குறித்தார். நல்லவேளை இதுவென்று பொழுதினைக் கணித்துப் புகன்றார்.

அவர் குறித்த நாளில், புகன்ற வேளையில் விழா நடந்ததோ? வென்றாரா வசிட்டர்!

இக் கேள்விக்கு ஆராய்ச்சி நோக்கில், நம் இதழில், இரண்டு பக்க அளவில், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

நடுவர்கள்

திரு. கருமுத்து தி. மாணிக்க வாசகம் செட்டியார், பி.ஏ. அவர்கள்

திரு. எம். எஸ். மெய்யப்பன், பி.இ. அவர்கள்

திரு. டாக்டர் தமிழண்ணல் இராம பெரியகருப்பன் அவர்கள்

திரு. ஆறு. அழகப்பன், எம்.ஏ. எம்.லிட் அவர்கள்

திரு. எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ.,பி.எல். அவர்கள்

உ

சிவமயம்



உறுதிகொள்வோம்

எண்ணம் சொல், செயல், இவை ஒன்றாகின்ற பொழுது மனிதன் தெய்வத்திற்கு ஒப்பானவனாகி விடுகிறான்.

எண்ணம் என்றால் நல்ல எண்ணங்கள்தான்! நமது எண்ணங்கள் நல்லவையாக இருந்தால் மட்டும் போதாது. எவ்வகையாலும் நாம் தீமைக்குத் துணையாகக் கூடாது என்பதனை உணர்த்தவே அண்ணல், காந்தியடிகள் தீயவற்றைப் பார்க்காதே! தீயவற்றைக் கேட்காதே! தீயவற்றைப் பேசாதே! என்று கூறினார்.

மனத்துக்கண் மாசிலனாக வாழ்ந்த மகான் காந்தியடிகள்.

மற்றவர்களும் அவ்வாறே வாழவேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் உழைத்த உத்தமர்.

அடிமைகளாக வாழ்ந்த மக்களை உரிமை பெறச்செய்த பெருந் தலைவர்.

அடிமை என்பது ஆட்சியில் மட்டுமில்லை, பழக்கத்தில், பண்பில் இன்னும் பலதுறையிலும் உள்ளது என்பதனை விளக்கி ஏழை, எளிய மக்கள் எல்லாவகையான உரிமைகளையும் பெறப் பாடுபட்ட பெரும்

ஞானி. அத்தகைய பேராற்றல் பெற்ற - பெரும் புகழுக்கு உரிய அண்ணலுக்கும் நமக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நம்மைப் போலவே அண்ணலும் வைசிய குலத்திலே உதித்தவர். பனியா என்னும் வகுப்பினைச் சேர்ந்தவர்.

நாட்டினைக் காக்கும் பொறுப்பிற்கு உரியவர்களான சத்திரியர்கள் பலர் இருக்க வைசிய குலத்தில் உதித்த காந்தி அண்ணல் நாட்டின் விடுதலைக்காகப் போராடி வெற்றி பெற்றது நமக்கெல்லாம் எல்லையற்ற பெருமையைத் தருவதாகும்.

ஊருணி நீர்நிறைந்தற்றே—உலகவாம்
பேரறி வாளன் திரு.

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கேற்ப மக்கள் அனைவரும் வாழ வேண்டும் என்று பாடுபட்டவர் காந்தியடிகள். அதனை நம் மரபினர் முடியும் வகையால் எல்லாம் செயல்படுத்தினார்கள். இன்னும் செயல்படுத்தி வருகிறார்கள் என்றால் மிகையாகுமோ?

காந்தியடிகளின் பல்வேறு இயக்கங்களிலும் நம் மரபுப் பெரு மக்கள் பங்கு பெற்றும் நன்கொடை வழங்கியும் அவற்றிற்கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் தந்துள்ளார்கள்.

காந்தியடிகளின் நூற்றாண்டு விழா உலகமெங்கும் கொண்டாடப் படுகின்ற இந்தச் சமயத்தில் நாம் எல்லையற்ற மகிழ்ச்சியும் பெரு மிதமும் கொள்கின்றோம்.


அதேபொழுது நாட்டிலே ஏற்பட்டுவருகின்ற பல்வேறு நிகழ்சி கள் நமக்கு அச்சத்தையும் வேதனையையும் தருவனவாக உள்ளன.

நாட்டுப் பற்றின்மை, மொழிப் பற்றின்மை, சுயநலம் - பதவிப் போட்டி அவநம்பிக்கை முதலியவை நாளுக்குநாள் துளிர்த்து வளர்வதை நாம் காண்கின்றோம்.

பண்டுதொட்டு புண்ணியபூமி என்ற பெயரினைப் பெற்ற நம் நாட்டில் காந்தியடிகளின் நூற்றாண்டு விழா மேற்குறித்த தீமை களுக்கு முற்றுப்புள்ளி வைக்குமானால் அதுவே உலகம் உய்யப் பெருவழியாகும்.

நாட்டில் நல்லவை பெருக - நன்மைகள் வளரச் சத்தியம் நிலைக்க நம்மாலான தொண்டுகளைச் செய்வோம் என்று அண்ணலின் நூற்றாண்டு விழாவில் நாம் உறுதி கொள்வோமா?

அற உலகின் தலைவர்! அன்பு உலகின் அன்னை
பண்புலகின் தந்தை! அருள் உலகின் தெய்வம்
அண்ணல் புகழ் போற்றி
அன்பு நெறி நாம் காப்போம்



காந்தியடிகள் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழாக இந்த இதழினை வெளியிடுவதில் எல்லையற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கின்றோம்.

அரசரின் வாழ்த்து

மகாத்மா காந்தியடிகளின் நூற்ருண்டு விழாவை யொட்டி "நகரத்தார்" சிறப்பு இதழ் ஒன்று வெளியிடுவதைப் பற்றி, பாராட்டுவ தோடு காந்தியடிகளின் கொள்கைகளேப் பின்பற்றி நகரத்தார்கள் நாட் டிற்குச் சேவை செய்து வரவேண்டுமாய்ப் பிரார்த்திககிறேன்.

நம் சமூகத்தினரின், நல்வாழ்வுக்காகவும் கல்வி, தொழில் இவற்றில் நம் சமூகத்தினர் மேன்மையுற்று விளங்கவும் ஓர் ஒளிவிளக்காக நகரத்தார் திங்கள் இதழ் விளங்க வேண்டுமாயும், அனேக பிரச்சினேகளுக்கிடையே வெற்றி மாலே சூடி, தங்கள் இதழ் திங்கள் தோறும் ஒவ்வொரு நகரத்தார் இல்லத்திலும் திகழ வேண்டுமாயும் பிரார்த்திக்கிறேன்.

செட்டிநாடு இல்லம்,
சென்னே 20.

மு. அ. முத்தய்யா செட்டியார்.

நன்மலர்கள் சூட்டுகிருேம்

அடிமைஇருள் எங்கும்சூழ
அறியாமை அரசோச்ச
மடமையது அமைச்சாகி
மக்களெல்லாம் மனம் நொந்தகாலம்!
அதிகாரம் பெருமையாகி
ஆணவமே சிறப்பாகி
கோழைகளே வீரராகி,
கொடுமையது பவனி வந்த காலம்!
பொன்விளக்காய்ப் புதுச்சுடராய்
பழமைதனே மறவாத புதுமையாகி
பக்குவமாய்ச் சத்தியத்தைப் பரப்புகின்ற குருவுமாகி
நலமாகி — வளமாகி, தியாகியாகி
நாட்டினுக்கு ஓர்உயிராய்க் காந்திவந்தார்.
வந்தவர் ஒருவர் - நமக்குத் தந்தவை ஆயிரம்
அண்ணல்தனேப் போற்றி
அன்புமலர் சொறிவதற்கு
நம்குலத்துப் பெருமக்கள்
நன்மலர்கள் தந்துள்ளார்
அண்ணல் பொற்பாதமதில்
அவற்றையெல்லாம் சூட்டுகிருேம்.

ஆசிரியர்.

அங்கங்களின் பயன்

"தமிழ்க்கடல்" "சிவமணி" ராய. சொக்கலிங்கன்

அறவாழி அந்தணனின்—அணியுலகம் எல்லாம்
உறநாடி ஒருபெரியோன் ஒருவனிவன் என்ன
அறநாட்டும் அம்மானின் அடிக்கமலப்போதில்
தரைநாட்டிச் சாய்க்காத தலையென்னதலையே!
சபர்மதியான் தலைவணங்காத் தலையென்ன தலையே!!

மாதவத்துப் புத்திலிபாய் மணிவயிறு வாய்த்த
தீதிலுயர் சீரறத்தைச் செகமுழுதும் சேர்த்த
நாதனெழில் நல்வடிவம் நாகரிகம் நண்ணும்!
காதலதும் மாந்தாத கண்ணென்ன கண்ணே!
காந்திதனைக் காணாத கண்ணென்ன கண்ணே!!

கோவியலை நம்மன்னை கொள்ளுதற்குச் சூழ்ந்து,
பூவுலகம் இன்றுவரைப் பூணாத கீர்த்தித்
தாவிலறப் போர்வகுத்த, தண்ணளியார் காந்திச்
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
செய்யவன்சீர் கேளாத செவியென்ன செவியே!!

காதல்நிறை கஸ்தூரி கணவன்; உயர்நந்தாய்
தீதிலருஞ் சிறுவன்; சீர்த்திருவுலகிற் பெரியோன்;
ஏதமெதும் அறிகில்லான்; இருங்குணத்தின் குன்றானன்
மூதறிஞன் மணம்முகரா மூக்கென்ன மூக்கே!
மோகனனை முகராத மூக்கென்ன மூக்கே!!

சொந்தவர சிந்தியத்தாய் சூடிமுடி தாங்க
முந்தையோர் காணாத முறையிலொரு நற்போர்
எந்தவுல கும்வியக்க இயற்றுபெருங் காந்தி,
நந்தலைவன் புகழ்பாடா நாவென்ன நாவே!
நாயகனை ஏத்தாத நாவென்ன நாவே!!

தள்ளரிய பெருங் கீர்த்தி, தனியாற்றை மண்டும்
பள்ளமெனும் தகையானை—பாரதத்தாய் ஈன்ற
எள்ளுகுணம் இல்லானை—எம்மானை—காந்தி
வள்ளல்தனை—வாழ்த்தாத வாயென்ன வாயே!
மகாத்துமனே யென்னுத வாயென்ன வாயே!!

மாந்தருய இப்புவியில் வந்துதித்த வள்ளல்!
சாந்தகுணன்! தண்ணளியன்! சபர்மதிக்கோன்! தாவிலான்!
ஏந்துபுகழ் மோகனப்பேர் எம்பெருமான்! ஈரடியான்!
காந்தி திருமுன்குவியாக் கையென்ன கையே!
கழலிணைகள் பற்ருத கையென்ன கையே!!

பொய்வளரும் நெஞ்சினர்க்குப் புறமானுன்! பூதம்
அய்வகையும் நன்றடக்கி ஆண்ட திருவாளன்!
உய்வறியாச் சிறுதகையேன் உளமிருந்த காந்தி!
மெய்யுடையான் மெய்வணங்கா மெய்யன்ன மெய்யே!
மேதகவோன் தாள்வீழா மெய்யென்ன மெய்யே!!

செயிர்தீரப் பண்டரசு செய்துலகின் முடிபோல்
அயர்வின்றி ஒளிர்ந்தநம தன்னையின்று மண்ணில்
துயர்தாங்கல் ஆற்றுமல் தூய்பணிமேற் கொண்ட
உயர்காந்தி தனைநினையா உளமென்ன உளமே!
உத்தமனைச் சிறையிறுத்தா உளமென்ன உளமே!!

இருந்தகைமை இந்தியநா டின்றேழை யாகி
வருந்துயர் தீர்த்திடவே, மாதவத்தோர் வாடா
அரண்மனையிற் கொலுவிருக்கும் அருமந்த சீர்த்தி
அருந்தவனை அணுகாத அறிவென்ன அறிவே!
அறக்காந்தி சீரறியா அறிவென்ன அறிவே!!

நன்னெறி நின்று ஒழுகுவோம்

மு. நாராயணன் செட்டியார் அவர்கள்
தலைவர், இந்தியா லெதர் கார்பொரேஷன், சென்னை.

மகாத்மா காந்தியடிகள் நம் தலைமுறையில் வாழ்ந்த ஒரு மாபெருந் தியாகி. அடிகள் நம் பாரத நாட்டை அடிமையிலிருந்து விடுவித்துச் சுதந்திர நாடாக்க விரும்பினார். அதன்படி சுதந்திரம் பெற்றுத்தந்து தம் நாடும் மற்றைய நாடுகளுடன் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தார். அண்ணல் காந்தியடிகள் நம் மக்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் பெற்று வாழ விரும்பினார். அடிகள் நம் மக்கள் நல்ல முறையில் வாழ வழி வகுத்துக் கொடுத்துச் சத்திய நெறிகளையும் போதித்தார். காந்தியடிகள் ஒரு சிறந்த தியாகிமட்டு மல்ல, ஒரு பேராற்றல் வாய்ந்த உண்மை தேச பக்தருமாவார்.

தேசத்துக்காகக் காந்தியடிகள் தம் சுக துக்கங்களைத் துறந்து ஏழ்மை வாழ்வினை வாழ்ந்தவர். அடிகளாரது பெருந்தன்மையை எடுத்துக் கூற நம்மால் இயலாது. இருந்த போதிலும் அடிகளது பெருமையைப் பேசுவதில் நமக்கு ஒரு மகிழ்ச்சிப் பெருமிதம் உண்டா கிறது. காந்தியடிகளின் நூற்றுண்டு நினைவு விழாவில் அவர்களை நினைந்து, புகழ வேண்டியவர்கள் நாம். அதன்படி நினைந்துப் புகழ்வோமாக. காந்தியடிகள் காட்டிய நன்னெறியினின்று ஒழுகுவோமாக.

காந்திஜி நினைவினால் நாம் தூய்மை அடைவோமாக

அ. மு. மு. அருணாசலம் செட்டியார் அவர்கள்

மகாத்மா காந்தியின் நூறுவது ஆண்டு பிறந்த தின வாரத்தை ஒரு விழாவாக நாம் கொண்டாடுவது நமக்கும் நமது நாட்டுக்கும் மிக நன்றி பயப்பதாகும். தேசத்துக்கு விடுதலை வாங்கித் தந்த நமது "அப்பன்" என்பதாக மட்டும் நாம் அவருக்கு அஞ்சலி செலுத்துவது போதாது. அவர் ஒப்பற்ற அரசியல்வாதி, அவர் விடுதலைப் போராட்டத்தை அஹிம்சை முறையில் புது விதத்தில் உலகமே காணாத வகையில் நடத்தி வெற்றி கண்ட அவதார புருஷர், என்பதற்காக அவருக்கு நினைவு அஞ்சலி செய்வது போதாது. அவர் நமக்குச் செய்துள்ள சாதனை மகத்தானது என்றாலும், அவர் வாழ்ந்த தூய வாழ்க்கையின்மூலம், கடைப்பிடித்த சத்திய நெறியின் மூலம், நாட்டுமக்களுடன் தானும் ஒருவராக ஒன்றிக்கலந்து, அவர்களுடன்

தன்னையும் ஒருவராகவே மதித்து நடந்துகொண்டது மூலம் தம்மை மனிதர்களுக்குள்ளே ஒரு மாணிக்கமாக உயர்த்திக்கொண்டது போலவே நமது நாட்டு மக்களையும் மண் பொம்மைகளைப்போ லிராமல் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் நடக்கும் தைரியசாலி களாகச் செய்துவிட்ட மகத்தான சாதனையை வேறு எவரும் செய்ய முடியாத அற்புதத்தை—அவர் புரிந்திருக்கிறார். நாம் அறியாமலேயே நம்மை உயர்ந்த மனிதர்களாக, கௌரவமுள்ள மனிதர்களாக மாற்றிய விதம் தெய்வாம்சம் பொருந்திய அவதார புருஷர்களால் மட்டுமே சாத்தியமாகும். அத்தகைய மகாத்மாவுக்கு நாம் ஆண் டுக்கு ஒரு நாள் நினைவுகூறுதல் மட்டும் போதாது. நாள்தோறும் அஞ்சலி செலுத்தவேண்டும்.

அவருடைய நாட்டுப்பற்றும், நாட்டுமக்களிடமுள்ள பற்றும் எப்படி ஆழ்ந்து அவருடைய உள்ளத்தைப் பூரணமாகத் தன்னுடைய தாக ஆக்கிக்கொண்டு விட்டதோ, அதேபோலவே அவருடைய தெய்வ பக்தியும் அவருடைய நித்திய வாழ்க்கையில் பதிந்து கலந்து அவருடைய உள்ளத்தைப் பூரணமாக்கிவிட்டன. அவருடைய பக்தியையும், அன்பு நெறியையும், சாந்த நிலைமையையும், நாம் அனைவரும் நினைந்து நினைந்து அவருக்கு அஞ்சலி செய்யவேண்டும்.

நமக்கு அவர் தேடித்தந்த விலை மதிக்கவொண்ணாத சுதந்திரம் என்னும் பொக்கிஷத்தைப் பெற்றதனால் அல்லவோ நமது தொழில் கள் அமோகமாக வளர்ந்துவிட்டிருக்கின்றன. அவற்றின் பயனையும் நாம் அடைந்து வருகிறோம். மேலும் மேலும் தொழில் வளர்ச்சி பெருக வழிவகை செய்து வருகிறோம். இந்த வளர்ச்சி தடைப்படாது பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமையாகும். சுதந்திரத் தைப் பாதுகாப்பது எப்படி முக்கியமோ, எப்படி நம்முடைய பொறுப்போ, அப்படியே நாட்டுத் தொழில்களைப் பாதுகாத்து வளர்ப் பதும் நமது பொறுப்பு. காந்தி நூற்றாண்டில் இதையும் நாம் நினைவு படுத்திக் கொள்ளவேண்டும்.

மேலும் அவர் போதித்த நன்னெறி, மனத்தூய்மை, சத்திய வாழ்க்கை, நேர்மை போன்ற பெரிய, ஆனால் எல்லோராலும் கடைப் பிடித்து ஒழுகக்கூடிய, நல்லுபதேசங்களையும் நாம் நினைத்துப் போற்றி, சந்தோஷப்பட்டால்மட்டுமே நமது கடமையைப் பூரண மாகச் செய்தவர்களாக ஆகமாட்டோம். நாம் ஒவ்வொருவரும், பாமரர்களானாலும், படித்தவர்களானாலும், தத்தமது நெஞ்சத்தைத் தொட்டுப்பார்த்து, அவர் காட்டிய பாதையிலிருந்து எவ்வளவுதூரம் தாம் விலகிப்போயிருக்கிறோம் என்பதை மறைக்காமல் உணர்ந்து மறுபடியும் தங்கள் வாழ்க்கையை உன்னத நிலைக்கு உயர்த்திக் கொள்ள முயற்சி செய்வதன் மூலமே நாம் நமது தேசத் தந்தைக்கு உண்மை அஞ்சலி செய்தவர்களாக ஆவோம். இந்தக் காந்தி நூற்றாண்டு ஜனன விழாவில் இந்த பிரதிக்கினையைச் செய்து கொண்டு நாம் தூய்மை பெறுவோமாக.

என்றென்றும் ஒளிவீசும்!

கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்கள்

'நாம் பயனற்றவர்கள், வாழ அருகதையற்றவர்கள், வெந்த சோற்றைத் தின்று விதி வந்தவுடன் சாகவேண்டியவர்கள்' என்று எண்ணிய எண்ணற்ற மக்களுக்கு, 'வாழ்வு வளமானது, வற்றாத ஊற்றானது, அதைப் பெறுவதே நம் பிறப்புரிமை' என்று கூறிய அண்ணல் காந்தியின் நூறாவது பிறந்தநாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

நாடும், ஏடும், நல்லவர்கள் இதயமும் போற்றும் மகாத்மா காந்தியவர்களை, ஆப்பிரகாம் லிங்கனுடனும், லெனினுடனும் நாம் ஒப்பிடுகிறோம். ஆனால், வரலாற்றுப் பேரேடுகளைத் திருப்பும்போது, புத்தருக்கும், இயேசு பிரானுக்கும், நபிநாயகத்துக்கும் அடுத்து எண்ணத்தக்க அண்ணல் காந்தியவர்கள், எல்லா அரசியல் தலைவர் களைக் காட்டிலும் மேலானவர் என்பதை நாம் மறந்துவிடுகிறோம்.

காட்டிலே இரகுகுலத் திலகமான இராமனைத் தேடச் சென்ற பரதன், குகனைச் சந்திக்கிறான். இராமனின் தாயைக் குகனுக்கு அறிமுகம் செய்கையில்—"மூன்று உலகு ஈன்ற பிரமனையே பெற்ற திருமாலை மகனாகப் பெற்ற பேறு உடையவள் இவள். ஆனால், நான் பிறந்ததால் துறந்த பெரியாள்" என்று கூறுகிறான். நமது நாட்டில் பெற்ற செல்வத்தைக் காட்டிலும், துறந்த செல்வத்தையே பாராட்டு கிறோம். இதனையே பட்டினத்தடிகள் வாழ்க்கை வரலாற்றிலும் காண்கிறோம். பட்டினத்து அடிகள் பெரும் செல்வத்தையெல்லாம் துறந்து காடு சென்ற பின், அரசன் அவரைக் காண, கானகம் சென்றான். அவர் நிஷ்டையில் இருந்ததினால், மன்னனும் பரிவாரங் களும் நின்றுகொண்டிருந்தனர். அவர் விழித்தவுடன், மன்னன், "நீங்கள் சுகபோகங்களையெல்லாம் விட்டுவிட்டு இங்கு வந்து என்ன கண்டீர்" என்றான். "நீர் நிற்கவும் நான் இருக்கவும் கண்டேன்," என்றார் பட்டினத்தடிகள். இதுபோல, செல்வத்தில் வாழ்ந்துவந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, நினைத்தால் லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கும் திறமையுடையவர், மாளிகையை விட்டு மண் குடிசைக்கு வந்தார். ஏழையோடு ஏழையாக, தீண்டப்படாதவர்களை வாழ்விக்க, அவர்களுடனேயே வாழவந்தார். உலகத்துப் பெரும் தலைவர்களான, பலரும் ஏன் ஆப்பிரகாம் லிங்கன் உள்பட மண் குடிசையிலிருந்து, அரசியலிலும், சமுதாயத் தொண்டிலும் ஈடுபட்ட

காரணத்தால், மாளிகைக்குச் சென்றூர்கள். அரசியல் தலைவர்கள் ஆனூர்கள். ஆனால் அண்ணல் காந்தியடிகள், உரிமை பெற்றவுடன், நேரு பெருமகனாரிடம் அரசியலை ஒப்பித்துவிட்டு, மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு என்று கருதி, மக்களுக்குத் தொண்டு செய்து கொண்டே உயிர் துறந்தார்.

திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டுவிழா நடக்கும் இவ்வாண்டில் காந்தியண்ணலின் வாழ்வை வள்ளுவத்துடன் இணைத்துப் பார்க்குமாறு வள்ளுவர் அண்ணல் காந்தியின் வாழ்க்கை வரலாற்றின் கடைசிப் பகுதிக்கு ஒரு குறள் இயற்றிய பெருமையே பெருமை :

“தொழுதகையுள்ளும் படை ஒடுங்கும் ஒன்றூர்
அழுத கண்ணீரும் அனைத்து”

பயனில் பற்றின்றி, கீதை கூறிய வழியிலேயே சென்ற மகான், மகாத்மா. அவர் நம் நாட்டு மக்களுக்கு, அச்சத்தைப் போக்கி, மாக்களாக வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு, ‘ஹரிசன்’ என்று பெயரைத் தந்து மக்களாக்கி அவர்களுக்கு ஒரு பெரிய இடத்தை அரசியலில் தந்தார். அவர் கண்ட கனவுகள் செயலாக்க முற்பட்ட செயல்கள் எல்லாம் அவர் காலத்தில், நனவாகவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவருடைய கனவுகள் நனவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

பல வருடங்களாக வரண்டு கிடந்த ஒரு நதியில் அசுத்தங்கள் சேர்ந்துவிடுகின்றன. அந்த நதியிலே மழை ஒரு சில நாட்கள் பெய்து, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடினூல் அந்த அசுத்தங்கள் தான் முதலில் மிதக்கும். அதுபோல வரண்ட இந்தியாவில், 22 ஆண்டுகளில் உரிமை மழை பெய்திருக்கிறது. அதனூல், அடியில் தங்கியிருந்த அசுத்தங்கள் எல்லாம் இன்று மிதக்க ஆரம்பித்து விட்டன. எவ்வாறு கலங்கிய தண்ணீர், தெளிவடையும் போது, இனிமையாகிறதோ அதுபோல, இன்று கலங்கிய அரசியல் தெளிவு பெற்று இனிமை தரும் என்பதில் ஐயமில்லை. அண்ணல் காந்தி அவர்கள் 1921-ஆம் ஆண்டு, மதுரை ஆலை ஒன்றில் விலக்கப்பட்ட ஆயிரம் மக்களுக்கு, புனர் வாழ்வு அளிக்கத் திட்டமிட்டு ஸ்ரீ மீனூட்சி ஆலையைத் துவக்க மதுரை வந்தார். ஸ்ரீ மீனூட்சி ஆலையின் பதிவகத்திலேயே தங்கியிருந்தார். அந்தப் பதிவகம் என்ன மாதவம் செய்ததோ? அங்கேயே அவர் ஏழையின் துயர்கண்டு முழத் துண்டைக் கட்டினூர்.

ஏழையோடு ஏழையாய், வாழ்ந்தவர்கள் பலர். ஆனூல், செல்வத்தில் பிறந்து, வளர்ந்து, பயன் கருதாது, மாளிகையிலிருந்து மண் குடிசைக்குச் சென்றவர் காந்தி. ஆகையால் அவரை மகாத்மா என்கிறோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எல்லோர் உள்ளத்திலும் இடம் பெற்ற அமரர் அண்ணல் காந்தியவர்களின் வாழ்க்கை, நமக்கும் நமது வழித் தோன்றல்களுக்கும் என்றென்றும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. அன்பில்லார் எல்லாம் தமக்கே உரியவர் என்றும், அன்பு நிறைந்தவர் தம் உயிரால் பிறர்க்கு நலம் விளைவிப்பவர் என்றும் பொருள்பட வள்ளுவர் பெருமான்,

"அன்பில்லார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என அழகாக மொழிந்துள்ளார். அண்ணல் காந்தியடிகள் அன்பு நிறைந்த உள்ளத்தினராய், மன்பதைப் பணியையே தமது ஒரே குறிக்கோளாகக் கொண்டு, அதற்காகத் தம் உயிரையே அர்ப்பணித்தார்.

அவருடைய புகழும் அவரை உலகுக்கு ஈந்த இந்தியாவின் சிறப்பும் என்றென்றும் ஒளி வீசித் திகழுமாக.

காந்தி காட்டிய பாதையில்....

வலம்புரி அண்ணாமலை

அடிமை வாழ்க்கை அகன்று செல்லவும்
உரிமை வாழ்க்கை உதயம் ஆகவும்
உண்மை அகிம்சை உலகில் நிலவவும்
தொண்டுகள் ஆற்றிய தூயவர் காந்தி,
நிலைமொழி ஈற்றில் நின்ற உயிரையும்
வருமொழி முதலில் வந்த உயிரையும்
ஒன்ற இணைக்கும் உடம்படு மெய்போல்
இந்து முசுலீம் இருவரும் ஒன்றாய்க்
கூடி வாழக் குவலயந் தன்னில்
உடம்படு மெய்யாய் உழைத்தவர் காந்தி,
இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்றே
இலக்கண நூலார் இயம்பும் காலம்
மூன்றில் நிகழ்வு முன்பின் இரண்டையும்
தழுவும் பான்மையைத் தாரணி உணரப்
பழமையும் புதுமையும் பாங்குடன் தழுவி
வாழ்ந்து காட்டிய வள்ளலார் காந்தி,
தம்மைத் தாமே வருத்தி வருத்திப்
பிறர்நலம் பேணிய பெம்மான் காந்தி,
காட்டிய பாதையில் காலடி வைத்து
வாழ்வோம் நாமும் வழிவழிச் சிறந்தே.

வள்ளுவர் வழியில் காந்தி அண்ணல்

ஆவி. க. மெ. அரு. தியாகராசன் செட்டியார் அவர்கள்

உலகம் உய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தால் ஒப்பற்ற ஒரு நூலைத் தந்து அருளினுர் தெய்வப் புலவர் திருவள்ளுவர். அவர் அருளிய அறங்கள் பல. அவற்றுள் ஒன்று வாய்மை.

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

என்ற குறளில் தாம் கண்ட மெய்யான பொருள்களுள் வாய்மையை விட நல்ல பொருள்கள் வேறு இல்லை என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்ருர். இக்கூற்றுக்கு இலக்காக வாழ்ந்தவர் பலர். இந்த நூற்ருண்டில், நமது கண் முன்ருல், நாமறிய நடந்து காட்டிய வாய்மையாளர் அண்ணல் காந்தியாவர்.

காந்தி, கடவுள் என்ருல் ஒரு பெயரோ, உருவமோ அன்று, உண்மைதான் கடவுள் என்று கொண்டார். அவர் கொண்ட சிறந்த நெறிகள் இரண்டு. ஒன்று சத்தியம். மற்ருென்று அகிம்சை. இவற்றையே திருவள்ளுவர் வாய்மை, கொல்லாமை, புலால் உண்ணுமை முதலான மூன்று அதிகாரங்களில் கூறுகின்ருர். காந்தி, உலகத்தில் உண்டாகும் பலவிதச் சிக்கல்களுக்கும், பிணக்குகளுக்கும், போர்களுக்கும் இடையே, உண்மை என்ற கடவுளை வழிபட்டார். வெற்றியும் பெற்ருர். உள்ளத்தில், சொல்லில், செயலில் என்ற மூன்றிடத்தும் வாய்மையே கொண்டார்.

காந்தியடிகள், தம் வாழ்வில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளை, ஒளிவு மறைவின்றி, உள்ளது உள்ளபடியே கூறுவது அவர் தம் வாய்மைப் பண்புக்குச் சான்று. தாம் அறியாமற் செய்த குற்றங்களைக் கூடத் தமது சத்திய சோதனையில் எழுதி வைத்திருக்கின்ருர். அவரது வாழ்வு ஏனையோருக்குத் தெரியாத இரகசிய வாழ்வு அன்று. அனைவரும் அறிந்த திறந்தவெளிப் புத்தகம்.

உள்ளத்தில் தோன்றுவதை உள்ளவாறே சொல்லும் இத்தகைய வாய்மைப் பண்பால் அண்ணல் காந்தியின் வாழ்வு உலகம் போற்றும் வாழ்வாக ஆயிற்று.

"உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக் கிணங்க அண்ணல் காந்தி இன்று உலக மக்களின் உள்ளத்துள் ஒளியாக விளங்குகிருர்.

வாழ்க காந்தி.

காந்திஜியும் நகரத்தார் சமூகமும்

அ. லெ. நடராசன் அவர்கள்

மகாபாரதம் இராமாயணம் ஆகிய இருபெரும் இதிகாசங்களையும் எளிய இனிய நடையில் எழுதிப் பதிப்பித்து காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களால் பொன்னுடை போர்த்தப்பெற்று ஸ்ரீமுகம் பெற்றவர்கள்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நகரத்தார் சமூகத்தினரின் பொருளாதார நிலை மிகவும் நல்ல நிலையில் இருந்தது என்று சொல்லலாம். பர்மா, மலேயா, சிலோன், சைஞ, ஜாவா முதலிய நாடுகளில், கொண்டு விற்கச் சென்று நகரத்தார்கள் பொருள் ஈட்டினுர்கள்.

அப்போது நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தின் கட்டுக்கோப்பு மிக உன்னதமான நிலையில் இருந்தது. தம் சமூகத்தினரைத் தவிர்த்துப் பிற சமூகத்தாரிடம் நகரத்தார் இளைஞர் ஊழியம் புரிந்தது இல்லை. பிற சமூகத்தாரிடம் வேலைக்கு அமர்வது இழிவு என்னும் கருத்து, நகரத்தார் குலப் பிரமுகர்களிடையே ஓங்கி வளர்ந்து இருந்த காலம் அது. இதனுல், பிடிப்பும் ஒற்றுமையும் – உதவி மனப்பான்மையும் கண்ணியமும் கடமை உணர்ச்சியும் விசுவாச உணர்ச்சியும் நகரத்தார் சமூகத்திடையே, அன்றுட சமூக வாழ்வில் காணப்படும் சிறப்பு இயல்புகளாக விளங்கின.

செல்வச் செழிப்பின் காரணமாக, நகரத்தார் சமூகத்தில் சில தீய பண்புகள் தலைதூக்கி அட்டகாசம் செய்யத் தொடங்கின. கலியாணம், புதுமை, கார்த்திகைச் சூப்பிடி, திருவாதிரை, தீர்த்தங் குடித்தல் முதலிய விசேடங்களில் 'நான் முந்தி நீ முந்தி' என்று போட்டியிட்டுக் கொண்டு, ஊதாரித்தனமாக நகரத்தார் சமூகத்தினர் செலவு செய்து வந்தனர். இது மட்டுமல்லாமல், ஏழைக் குடும்பத்தில் பிறந்த நகரத்தார் வாலிபனுக்கு, அந்தச் சமூகத்திலே பெண் கிடைப்பது அரிதாய் இருந்தது. இருபதாயிரம் முப்பதாயிரம் ரூபாய் வரை ஒரு பெண்ணின் தந்தைக்குப் பணம் கொடுக்கும் ஒரு தீய பழக்கம் சர்வசாதாரணமாய் நடுத்தர வர்க்கக் குடும்பத்திலே நிலவிற்று.

இது மட்டுமல்லாமல், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே படிப்பு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் அதிக தார தம்மியங்கள் நிலவின. ஆடவர்கள் அனைவரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாய் இருந்தார்கள்; பெண்களோ எழுத்து வாசனை ஒரு சிறிதும் இல்லா

தவர்களாய், இருந்தார்கள். அன்று வாழ்ந்த நகரத்தார் சமூகப் பெண் தன் கணவன் 'தொலையில்' இருந்து போடும் கடிதத்தைப் பிற ஆடவனைக் கொண்டு படித்தறிந்து கொள்ளக்கூடிய அவல நிலையில் இருந்தாள்.

இந்த அவலநிலைகளைச் சமூகத்திலிருந்து களைவதில் ஆர்வம் கொண்டு, நகரத்தார் சமூக இளைஞர்கள் ஒரு சங்கத்தை நிறுவினார்கள். இதற்கு, 'தன வைசிய ஊழியர் சங்கம்' என்று பெயர். இந்தச் சங்கத்தில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டு, ஆர்வத்துடன் ஊழியம் செய்தவர்களில், சொ. முருகப்பா, காந்தி மெய்யப்ப செட்டியார், ராய சொக்கலிங்கன், பிச்சப்பா சுப்பிரமணியன், குருகுலம் சுப்பிரமணியம் செட்டியார், ராயவரம் கதிரேசன், வித்வான் அரு. சோமசுந்தரம் செட்டியார், ஆறுவயல் ராம. நாகப்ப செட்டியார், வை. சு. சண்முகம் செட்டியார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இந்தச் சங்கத்தினரின் உழைப்பின் காரணமாகவே, தன வைசிய சமூகத்தாரிடையே விழிப்பும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டன என்று சொல்லலாம்.

பெண் கல்வி, கிராப் வைத்துக்கொள்ளுதல், சிக்கனக் கலியாணம், சீர்திருத்த உணர்ச்சி ஆகிய துறைகளில் கவனம் செலுத்தி, தன வைசிய ஊழிய சங்கத்தார் பணி புரிந்து வந்தார்கள். இவர்களுக்கு இருந்த சமூக சீர்திருத்த ஆவேசம், அவர்களைத் தேசிய இயக்கங்களிலும் பங்கு கொள்ளும்படி தூண்டிற்று.

இதனால் காந்திஜியைச் செட்டிமார் நாட்டுக்கு அழைக்கவும், அவருடைய ஆக்கப் பணிகளில் பங்கு பெறவும், செய்த பெருமை தன வைசிய ஊழிய சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு உரியது. கதர் கட்டுதல், தேசிய ஆரம்பப் பள்ளிக்கூடங்களை அமைத்தல், தீண்டாமை விலக்கல், சீர்திருத்தத் திருமணம் செய்தல், தேசியப் பணிகளுக்கு நிதி வழங்குதல் போன்ற துறைகளில் ஊழிய சங்கத்தார் உழைத்தனர்.

காந்திஜி செட்டிமார் நாட்டுக்கு இரண்டு முறை வருகை செய்திருக்கிறார்; முதல் முறை காந்திஜி காரைக்குடிக்கு வருகை செய்த போது, நான் சிறு பையன்; எனக்கு சுமார் பத்து வயது இருக்கலாம். காந்திஜி சதுக்கம் என இப்பொழுது வழங்கும் மகர்நோன்புப் பொட்டலில் கூட்டம் நடந்தது. கட்டுக்கடங்காத கூட்டம். கூட்டத்

தோடு கூட்டமாக நானும் போய் வேடிக்கை பார்த்தது எனக்கு நினைவு இருக்கிறது.

அதன் பின்னர் ஹரிஜன யாத்திரை செய்தபோது, இரண்டாம் முறையாக காந்திஜி செட்டிமார் நாட்டுக்கு வருகை தந்திருக்கிறார். இதுசமயம் காந்திஜி, அமராவதி புதூரிலுள்ள ராய. சொக்கலிங்கன் அவர்கள் இல்லத்தில் ஒரு நாள் தங்கியிருக்கிறார். காந்திஜி செட்டிமார் நாட்டுக்கு வந்தபோது எல்லாம் "நான் ஒரு பனியா, நான் உங்கள் சமூகத்தைச் சேர்ந்தவன்; உங்களிடம் நிறையப் பணம் கேட்க எனக்கு உரிமை உண்டு" என்று வாதாடி நிறைய நிதி சேர்த்து இருக்கிறார்.

காந்திஜிக்கும் சீர்திருத்த ஆர்வமுள்ள செட்டியார் இளைஞர்களுக்கும் இடையே நல்லதொரு தொடர்பு உண்டு. அந்தத் தொடர்புகளை 'தன வைசிய ஊழியன்' 'குமரன்' முதலிய பத்திரிகைகளிலிருந்து தொகுத்து எழுதினால் பயனுடையதாய் இருக்கும்.

என்னைப் பொறுத்தவரை, காந்திஜியை மிக அண்மையிலிருந்து தரிசிக்கும் பேறு பெற்றவர்களில் நானும் ஒருவன். சென்னை தியாகராயநகரில் இருக்கும் தக்ஷிண ஹிந்தி பிரச்சார சபையில் நடந்த ஒரு கூட்டத்தில் நானும் காலம் சென்ற சக்தி அதிபர் திரு. வை. கோவிந்தன் அவர்களும் காந்திஜி அருகே அமர்ந்து பிறருடன் அவர் உரையாடுவதை, இரண்டு மணி நேரம் வரை ஆர்வத்துடன் செவிமடுக்கும் பேறு பெற்று இருக்கிறோம்.

இது மட்டுமல்லாமல் 'மாணவருக்கு', 'பெண்களுக்கு', 'நமது மொழிப் பிரசினை', 'பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்' ஆகிய காந்திஜியின் நான்கு நூல்களை எளிய தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் வாய்ப்பு எனக்கு நேர்ந்திருக்கிறது. இவற்றில் மாணவருக்கு, பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள் ஆகிய நூல்கள் இரண்டையும்—அப்போது ஆட்சி செய்த ஆங்கில அரசாங்கம் பறிமுதல் செய்தது. இந்தப் பறிமுதல் பற்றி 'தினமணி' அப்போது ஒரு தலையங்கமே எழுதிற்று.

இந்தப் பறிமுதல் சம்பந்தமாகக் காந்திஜிக்கு நான் கடிதம் போட்டேன்; தம் செயலாளர் மூலம் காந்திஜி எனக்கு இரு கார்டுகள் பதில் போட்டுள்ளார்.

நகரத்தார் சமூக மறுமலர்ச்சிக்கும் காந்திஜிக்கும் நெருங்கிய ஒரு தொடர்பு உண்டு. இதை ஒவ்வொரு நகரத்தார் சமூக வாலிபரும் நினைவில் பதித்துக் கொள்வது அவசியம் ஆகும்.

காந்தி மகான் எமையாளுங் கடவுள்

வேகுப்பட்டி கவிஞர்
பெரி. இலக்குமணச் செட்டியார்

[அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்]

வேந்தரெலாம் முடியரசை வெறுத்தகல அந்நியர்கள்
வெருவி நீங்க
மாந்தரெலாம் அரசுரிமை வளம்பெறவான் குடியரசு
மலரச் செய்தோன்
சாந்தமுறும் பாரதத்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வன்
தரும தூதன்
காந்திமகான் நூற்றாண்டு நினைவுதருங் கனகமலர்
காண்போம் இன்றே.

அன்புறையும் நெஞ்சகத்தன் ஆன்றபெருஞ் சற்குணத்தன்
அகிதர் தம்மின்
துன்புறையும் மருள் மாற்றித் தோட்டணைக்குங் கரதலத்தன்
துரிசில் லாமெய்
பொன்புரையும் எழில்நிறத்தன் புகலுவபோல் செயல்வினைகள்
புரியுஞ் சித்தன்
இன்புறையும் அருண்முகத்தன் காந்திமகான் எமையாளும்
இறைவன் தானே.

மகரத்தால் அலைமோதும் வாரிதிசூழ் நிலவுலக
வரைப்பின் கண்ணே
பகரத்தான் இறுதியிலாக் காந்திமகான் பணிபெருமை
பரவி வாழ்க!
சிகரத்தார் தீபமெனச் செந்தமிழ்நாட் டிடைமலர்ந்து
சிறப்புற் றோங்கும்
நகரத்தார் மாதஇதழ் வளம்பெற்று வாழிய!எந்
நாளும் நன்றே.

காந்தியடிகள் திருத்தசாங்கம்

வெ. சு. அழகப்பன் M. O. L.
(முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி)

1. திருப்பெயர் :—

பச்சைப் பசுங்கிளியே! பாரில் விடுதலையாம்
இச்சை வரச்செய்தோன் இன்பேரென்?—நிச்சலுமே
தன்னலம் பேணுத் தனித்தலைவன் காந்தியெனும்
இன்னலத்தோன் என்பாய் இனிது.

2. நாடு :—

வண்ணச் சிறுகிளியே! வாழ்வெலாம் இந்தியர்க்கே
எண்ணிக் கொடுத்தோன் எழில்நாடென்?—அண்ணல்தன்
கண்ணேனவே நாடிமிகக் காத்ததுவும் பாரதமாம்
மண்ணேனவே சொல்லி மகிழ்.

3. பதி :—

கிளைவாழ் சிறைக்கிளியே! கீதைமொழி வாயோன்
கிளைவாழ் பதிஎன்? கிளத்தாய் ?—அளையாநல்
தொண்ட ருளமே துலங்கு பதியாகக்
கொண்டா னெனவேநீ கூறு.

4. ஆறு :—

கன்னல் மொழித்தத்தாய்! காந்தியெம்மான் ஆறுசெப்பாய்
அண்ணல் மொழியுண்மை அத்தனையும் ஆற்றேழுக்கே
உள்ளம் செயல்சொல் உயர்நடக்கை எல்லாமே
பள்ளம்பாய் ஆறும் பகர்.

5. மலை :—

கொடிப்பவள வாய்க்கிளி!எங் கோமான் மலைஎன்?
தொடிப்பெண்டிர் பாற்சிலர் கூடி—நொடியில்
அலைத்தார் மலையாமல் ஆங்கிலரை; அன்னேன்
கலைவாயின் சொல்மலையே காண்.

6. ஊர்தி :—

தேன்மொழித் தத்தாய்! தெளியா அரிசனத்தார்
வான்துயர் தீர்த்திட்ட வள்ளலூர்தி யாதென்பாய்?
சன்மார்க்க மென்னுமொரு சாயாப் புரவிதனில்
நன்மார்க்கம் சென்றாரே நன்று.

7. படை :—

செய்யவாய் அஞ்சுகமே! சீர்சால்[1]கத் தூரிகோன்
உய்யும் திருக்கரத்தே உற்ற படைஎன்கொல்?
இன்னா செயாநல் அகிம்சையாம் ஏந்துபடை
எந்நாளும் கொண்டார் இனிது.

8. முரசு :—

அஞ்சுகமே! அம்மான் அணிமுரசும் என்சொல்லாய்?
அஞ்சாப் பறங்கியரும் ஆக்கம் செயமறுப்ப
ஒத்துழையாப் போர்முரசை ஓங்கி அறைந்தாரே
இத்தரையீர் கேட்டிடுவீர் என்று.

9. தார் :—

ஏரா ரிளங்கிளியே! எம்மான் தனித்தாரென்?
பாரோர்க்குப் பாங்காய் இராட்டைப் பரிந்தளித்தார்
பஞ்சம் பறப்ப,வெண் பஞ்சைநூ லாக்கியே
கொஞ்சும்தார் என்றார் கொடுத்து.

10. கொடி :—

இன்ப மொழிக்கிள்ளாய்! ஏந்தல் புகழ்காந்தி
நன்மை கொடியதனை நன்றுணர்ந் தோதாயோ?
அன்பே கொடியாய் அனைவோரும் சுற்றுதலே
இன்பம் எனப்பகர்ந்தார் இங்கு.

[1] கத்தூரிகோன்—கஸ்தூரிபாய் கணவன்

சரித்திரத்து நாயகன்

கவிஞர் அரு. சோமசுந்தரன், M.A., B.T.,
(முதல்வர், C. T. C. காரைக்குடி)

நாட்டுக் கொருதலைவன் நாகரிக உலகத்தின்
காட்டுத் தனம்நீக்கிக் கண்திறந்த கண்மணியான்!

வெள்ளைப் பேரரசு வெட்டிவைத்த குழிப்பிறந்த
வெள்ளப் பெருக்கமவன், வெற்றிக்கே சின்னமவன்.

சின்னப் பருவத்துச் செயல்களினால் மனிதனவன்!
பின்னை உலகத்துப் பெரும்பணியால் தெய்வமவன்!

தேடிப் பொருளீட்டும் தேசத்தில் அவனொருவன்
கோடி அருளீட்டும் குலதெய்வம் ஆயினனே!

நல்ல மாளிகையின் நாகரிகப் பிறவிஅவன்!
செல்லக் குடும்பத்தின் சிங்காரக் குழந்தைஅவன்!

ஆன்ற பலகல்வி அறிந்தஉயர் கல்விமான்!
சான்ற சட்டத்தைச் சார்ந்ததனால் வழக்கறிஞன்!

கத்தூரி பாயின் கைப்பிடித்த கணவனவன்!
சொத்தெல்லாம் உடைய சுகவாச முதலாளி!

என்ற நிலையிலிருந்தும் ஏற்றமிகு காந்திமகான்
சான்ற பெருமையெலாம் சந்தையிலே குப்பையென

வீசி எறிந்தான்; வீதிக்கே வந்துற்றான்;
பாசி படிந்த பண்பில்லாச் சமுதாயச்

சேற்றில் அமர்ந்தான்; சிங்கமெனக் கர்ச்சித்தான்
ஆற்றின் பெருக்காய் அரும்பணிக்குப் புறப்பட்டான்

தீண்டா தார்நடுவே தென்றலாய் இவ்வுலகில்
வேண்டா வகுப்புவாதம் வீழ்த்துகின்ற புயலாகி,

இந்து முஸ்லிம்கள் ஒற்றுமைக்கே எந்நாளும்
சந்து விளக்காகி, சரித்திரத்து நாயகனாய்,

அடிமை விலங்கறுத்த அரசனாய், உழைக்காத
மடமை தனைஒடித்த மனிதனாய், எந்நாளும்

நாட்டுப் பணிக்கென்றே நடைபோட்ட காந்திமகான்
கூட்டுப் பிரார்த்தனையைப் புதுப்பித்த குலக்கொழுந்து!

காக்கும் அகிம்சைக்கே கைகாட்டி! வையத்தை
ஈர்க்கும் அருட்காந்தம்! எல்லைகளே இல்லாத

புதிய உலகத்தைப் படைப்பிக்கும் புகழ்ச்சிற்பி!
பொதிய மலைகூடப் புறங்காட்டும் மனத்துணிவு!

போற்றும் கொள்கைக்கே பொறுமையுடன் உயிர்நீத்துக்
கூற்றும் மகிழ்வித்த கொடையாளன் காந்தியினைப்

பாட்டில் வைத்துப் பாராட்டி நம்இதயக்
கூட்டில் வைத்துக் கொள்கையெலாம் மேற்கொண்டு

நாளும் பணிசெய்தால் நாடெல்லாம் பொலிவுபெறும்
வாழும் மனிதஇனம் வளர்ந்து

நமது கடமை

கே. என். சுப்பையா பி.காம். ஆனர்சு.

வளர்ச்சிப் பகுதிப் பொறுப்பாளர்

சௌத் இந்தியா கார்பொரேஷன் ஏஜன்சீஸ் பிரைவேட் லிமிடெட்

புலால் உண்ணாமை, பொய் கூறாமை, மது வருந்தாமை, இவைகளைவிட, சந்திரமண்டலம் செவ்வாய் மண்டலம் போய் வருவது எளிய ஒன்றாக நம்முன் நீக்கமற நிறைந்துள்ள இந் நாளில் அடிகளாரின் நூற்றாண்டு விழா வந்திருப்பது சோதனையில் சோதனைதான்.

சத்திய சோதனை

வாய்மை வெல்லுமா? மது அரக்கன் மாய்வானா? மனப்பகை ஒழியுமா? மதவெறிகள் நீங்குமா? உலகம் உய்யுமா? அடிகளார் கனவுகள் நனவாகுமா? இவை நம்முன் நெடிதுயர்ந்து நிற்கும் வினாக்கள்.

சத்திய நெறிக்குப் புறம்பானவற்றை மக்கள் விரும்பவில்லை என்றாலும் முழுமையாக, தெளிவாக, எதிர்க்கிறார்கள் என்று சொல்ல இயலுமா?

இயலுமாயின் அண்ணலின் கனவுகளை இன்றும் கனவுகள் என்று குறிப்பிடும் நிலை நேர்ந்திருக்காதல்லவா?—அவை நனவுகளாக மலர்ந்திருக்குமே.

ஓய்வு ஒழிவு இல்லாத இயந்திர வேகமான மனித இயக்கத்தில் நன்மை எது? தீமை எது? என்று ஆய்ந்து உணருகின்ற தன்மையையே மனிதகுலம் இழந்துவருகிறது.

பகுத்தறிகின்ற தன்மை மிக்க ஓர் இனமான மனித இனம் பகுத்து அறிகின்ற தன்மையையே இழக்கின்ற நிலையை விடப் பரிதாபமான நிலை வேறு என்ன இருக்க முடியும்?

ஓய்வின்றி ஓடித்திரியும் மனித இனத்தை நல்வழிப்படுத்த அவ்வப்போது ஞானிகள் தோன்றியிருக்கிறார்கள்.

நம் தலைமுறையில் அற உணர்வாய் அற உருவாய்த் தோன்றியவர் அண்ணல் காந்தியடிகள்.

அவர் வழி போற்றி தீமைகளை அகற்றி வாய்மை வழி நடப்பதும் நாட்டைக் காப்பதும் நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

கருணை வழி!

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்

வெள்ளையர் ஆட்சி முடிந்ததென
விடுதலை நாமும் அடைந்தோமெனத்
துள்ளிக் குதித்தனர் பிள்ளைகளே.
சுதந்திர நாளைக்கொண் டாடினரே.

சின்னஞ் சிறுவர்கள் யாவருமே
சேர்ந்தனர் பள்ளியில் ஒன்றாக
வண்ண வண்ணம்பூ காகிதத்தால்
வகைவகை யாக அலங்கரித்தார்.

சட்டையில் சின்னக் கொடிஅணிந்து,
தாயின் மணிக்கொடி ஏற்றிவைத்து,
சுற்றிலும் நின்று வணங்கினரே;
சுதந்திர தேவியை வாழ்த்தினரே.

ஏழை எளியோரும் செல்வர்களும்
இனிதாய்க் கூடிக்கொண் டாடினரே!
வாழை மரங்களை நட்டனரே.
வாசலில் கோலங்கள் இட்டனரே.

வழியெல்லாம் தோரணம் கட்டினரே.
வளைவுகள் எங்கும் அமைத்தனரே.
அழகு படுத்தினர் ஊரையெல்லாம்
ஆனந்தம் பொங்கி வழிந்ததுவே.

கற்கண்டு மிட்டாய் வழங்கினரே.
கதர்உடை கட்டி மகிழ்ந்தனரே.
அற்புதம் செய்தனர் காந்திஎன்றே.
அகிலம் முழுவதும் போற்றினரே.

சுதந்திரம் வாங்கியே தந்தவராம்
 தூயவர் காந்தி படத்தினையே
விதவித மாக அழகுசெய்தே
 வீடுகள் தோறும் வணங்கினரே.

ஊர்வலம் வந்தனர் அணிஅணியாய்
 உயர்த்திப் பிடித்த கொடிகளுடன்
பாரத தேசத் தந்தையினைப்
 பலகோடி உள்ளங்கள் வாழ்த்தினவே.

தேசம் விடுதலை பெற்றிடவே
 தியாகம் புரிந்தோர் அனைவரையும்
பாசத் துடன்மக்கள் போற்றினரே.
 பாடிப் புகழைப் பரப்பினரே.

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே'
 என்றநம் பாரதி வாக்கினையே
எல்லோரும் எண்ணித் தலைநிமிர்ந்தார்.
 'எவர்க்கும் அடிமைநாம் இல்லை'யென்றார்.

குண்டுகள் துப்பாக்கிகள் ஏதுமில்லை
 கோரமாய் யுத்தமும் செய்யவில்லை
அண்ணலாம் காந்திஜி காட்டிவந்த
 அகிம்சை வழியிலே வெற்றிபெற்றோம்.

கத்திகள் ஏதும் வீசவில்லை
 காத்திடக் கேடயம் ஏந்தவில்லை
யுத்த களத்திலும் நிற்கவில்லை
 உத்தம வழியிலே வெற்றிபெற்றோம்.

சாந்தப் போரிலே வெற்றிபெற்றோம்
 சத்தியப் போரிலே வெற்றிபெற்றோம்
காந்தி வழியிலே வெற்றிபெற்றோம்
 கருணை வழியிலே வெற்றிபெற்றோம்.

இனப் பற்று உடையவர்

மழலைக் கவிஞர் நாகமுத்தையா, பி.காம். அவர்கள்

பழங்களை இனவாரியாகப் பிரித்து அடுக்கி வைத்திருப்பதைக் கண்டு மகிழ்வுறுகிறோம். அதுபோலவே பூக்களையும் இனவாரியாகப் பிரித்து வைத்திருப்பதைப் பார்க்கும்போதும் பரவச மடைகிறோம். காய்கறிக் கடைகளிலும் இவ்வழகைக் கண்டு ரசிக்க முடியும்.

இவ் வுண்மையை ஒப்புக் கொண்டால் மக்கள் இனவாரியாக இணைந்து வாழ்வதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஓர் இனம் மற்றோர் இனத்துக்கு உதவியாகவும் உறுதுணையாகவும் இருக்க வேண்டும். பாச உணர்வு கொள்ளாமல் பகை உணர்வு கொண்டு இனம் இனமாகப் பிரிவது இனியதும் அல்ல; ஏற்றுக் கொள்ளக் கூடியதும் இல்லை.

உபநதிகளை அழைத்துக் கொண்டு பெருநதி பரந்து ஓடிக் கடலில் கலக்கிறது. அதுபோலவே ஒரு நாடு பல இனங்களையும் அனுசரித்து ஆதரித்துச் சென்று இன்பக் கடலுக்கு வழி காட்ட வேண்டும்.

இக் கருத்துக்களைக் கொண்டவர்தான் மகாத்மா காந்தியடிகள்.

'நாக்கை அறுத்துவிட்ட போதும், மூக்கை நறுக்கிவிட்ட போதும், என்றால் உயிர்வாழ முடியும்; ஆனால் இறைவனின் நம்பிக்கையை அகற்றிவிட்டால் என்றால் உயிர் வாழவே முடியாது,' என்பது காந்தி அடிகளின் கருத்தாகும். அவருடைய கடவுள் ராமர்தான். அவர் அல்லாவை ஆதரித்தார்; ஏசுவை இனியவர் என்றார். இருப்பினும் ராமநாமத்தைத் தவிர பிற தெய்வ நாமங்களை அவர் நாள்தோறும் உச்சரித்தது இல்லை.

இஸ்லாம் கொள்கைகளைப் படிக்கச் சொல்லிக் கேட்டு மகிழ்வார். ஏசுநாதரின் போதனைகளைப் படித்துப் பார்த்து இன்புறுவார். இருப்பினும் கீதையின் மகத்துவத்தை அவரால் மறக்கவே முடியவில்லை.

அவரை கிருஸ்துவராக மாற்ற முயன்றவர்கள் பலர். அவரை முகமதியராக மாற்ற முயன்றவர்கள் சிலர். இருப்பினும் அவர் இந்து சமயவாதியாகவே இருந்தார். இந்து சமயத்தில் இஸ்லாமியக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவும், கிருஸ்துவக் கொள்கைகளுக்கு இடம் கொடுக்கவும் இசைந்தாரே அன்றி இந்து மதத்தை மறக்கவோ துறக்கவோ அவர் துணியவில்லை.

'மகாத்மா' என்ற புகழ்ப் பெயரை அவர் புறக்கணிக்க விரும்பினார் என்றாலும் தன்னை ஓர் இந்து மதத்தினன் என்று பெயரிட்டு அழைப்பதை அவர் பெரிதும் விரும்பினார். மதத்தையோ, இனத்தையோ புறக்கணிக்காமல் மதத்தோடும் இனத்தோடும் ஒன்றி நின்று உலக ஒற்றுமைக்குப் பாடுபட்ட உயர்ந்த உத்தமரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டால் நாமும் இனப்பற்று உடையவர்களாக வாழ இயலும் என்பது என் நம்பிக்கை.

வாழ்வளித்த செல்வன்

அமரர், சொ. முருகப்பா

ஆற்றல் நிறைந்தவெம் அம்மான் கண்டாய்
அன்புசால் நெறிகண்டாய் அண்ணல் கண்டாய்
போற்று கதராடைப் புனிதன் கண்டாய்
பொறுமையின் நிறங்கண்டாய் புவியோ ரெல்லாம்
ஏற்று புகழ்படைத்த எம்மான் கண்டாய்
இந்தியர்தம் வாழ்வுக்கா எழுந்தான் கண்டாய்
சாற்று புகழார்போர்பந்தர் மேவும்
தண்ணளியார் காந்தியெனும் தலைவன் தானே.

துரிசற்ற மக்கட்குத் தோழன் கண்டாய்
தூய்மைசால் நெறிகண்டாய் துறவி கண்டாய்
பரிசுத்த வாழ்வில்லம் பரிப்பான் கண்டாய்
பாருற்ற எளியாரின் அடியான் கண்டாய்
தெளியாத உயிர்களிடம் கருணை காட்டிச்
சிறைபுகுந்து வாழ்வளித்த செல்வன் கண்டாய்
சரியான வழியிதென்று நடந்து காட்டும்
தண்ணளியார் காந்தியெனும் தலைவன் ருனே.

இரண்டு நாடுகளில் இருபது நாட்கள்

எம். அருணாசலம்

டில்லியிலிருந்து ஏர் இந்தியா போயிங் விமானத்தில் 19-6-69 ஆம் நாள் காலை 8 மணி அளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க தாஷ்கண்ட் நகருக்குப் புறப்பட்டோம். விமானத்திலா சென்றோம். இல்லை! ஆகாய மாளிகையில் பறந்தோம் என்றே கூறவேண்டும். அதன் உள் அமைப்பு இந்தியச் சிற்பங்களைச் சித்தரிக்கும் சித்திரங்கள் நிரம்பி கண்கவர் வனப்புடன் சொகுசாகத் திகழ்ந்தது. இந்தியப் பண்பாட்டினை எடுத்துக் காட்டும் பணிப் பெண்களின் அன்பும், பணிவும் கலந்த உபசரிப்பு, பயணிகள் ஒவ்வொருவரும் ஒரு மகாராசா என்ற நினைவே அளித்தது. இந்நினைவு கலைவதற்குள் காலை 11-30 மணி அளவில் தாஷ்கண்ட் நகரை அடைந்தோம். விமான நிலையத்தில் நகராண்மைக் கழகத் தலைவர் (Mayor) எங்களை வரவேற்று உபசரித்தார்.

இந் நகருக்கும் நம் நாட்டிற்கும் உள்ள நீங்காத தொடர்பினை நாம் அறிவோம். அஞ்சா நெஞ்சம் படைத்த லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் புகழுடல் எய்தியது இந் நகரத்தில்தான் என்பதனை உலகறியும்.

ரஷ்யாவில் மிகவும் வளம் பொருந்திய முன்னேற்றமடைந்துள்ள மாநிலங்களில் ஒன்று உஸ்பெகிஸ்தான். பருத்தி, பட்டு உற்பத்திக்கும், நூற்பு இயந்திரங்கள், இயந்திர சாதனங்கள், இரசாயனப் பொருட்கள் உற்பத்திக்கும் பெயர் பெற்றது இம் மாநிலம். ரஷ்யாவின் நெல் விளைச்சலில் மூன்றில் இரு பங்கு இங்குதான் விளைகிறது. ரஷ்யாவிற்கு பெரும் பகுதி உணவும், உடையும் வழங்கும் இம் மாநிலத்தின் தலைநகர்தான் தாஷ்கண்ட்.

இது இரண்டாம் நூற்றாண்டில் உருவான, தொன்மையான நகராகும். பல ஆசிய நகரங்களைப் போல் இதுவும் பழைய நகர், புதிய நகர் இரண்டும் சேர்ந்து இலங்குகின்றது. புதிதாகக் கட்டிடங்கள் உருவாகிய வண்ணம் இருக்கின்றன. எல்லாம் மாடங்களுடன் திகழும் ஏழடுக்கு மாளிகைகள். மரங்களுடன் கூடிய

அகன்ற சுத்தமான சாலைகள், ரம்யமான பூங்காக்கள், சரித்திரச் சிறப்புற்ற நினைவுச் சின்னங்கள், கண்கவர் அங்காடிகள் நிறைந்த கிழக்குக் கடைத்தெரு, ஆடல் பாடல் நிகழ்ச்சிகளுக்கான சிறந்த கலை அரங்குகள், பல்வேறு தொழிற்சாலைகள், ஆராய்ச்சிக்கான அணு உலை முதலிய சிறப்பம்சங்கள் பொருந்தியது இந்நகர். பழைய நகர் நம் இந்தியப் பாணியில்தான் உள்ளது.

மக்களோ பெரும் பகுதியினர் முஸ்லீம்கள். உஸ்பெக் இனத்தவர்கள். நீண்ட அங்கிகளுடன் கூடிய இருண்ட நிற உடைகளையே ஆண்களும், பெண்களும் அணிகின்றனர். உருது மொழியே வழக்கில் உள்ளது. இந்தி பலருக்கும் புரிகின்றது. மசூதிகள் நிறைந்த நகரம் ரஷ்யாவிலேயே இது ஒன்றுதான்.

இந் நகரின் சிறப்பு வாய்ந்த இடங்களையும், மசூதி, பூங்காக்களையும் இரு உல்லாசப் பேருந்தில் (Luxury Coach) சென்று கண்டோம். நகரிலேயே புகழ் பெற்ற உஸ்பெக் இசை நாடகம், நடன கலை அரங்கினையும் (Uzbek Opera and Ballet Theatre) பார்த்தோம். கலை அழகும், சிற்பச் செறிவும் பெற்று இக்கால நவீன வசதியுடன் திகழ்கிறது இக் கலையரங்கு.

அடுத்து நாங்கள் பார்த்த இடம் வரலாற்று முக்கியத்துவம் உடைய இந்திய, பாகிஸ்தான் தலைவர்கள் கூடிப் பேசிய தாஷ்கண்ட் மகாநாடு நடைபெற்ற மாளிகை. இறுதியாக, 'போர் வீரனுக்கு வெற்றி! உழவனுக்கு வெற்றி!' என்று புதிய கொள்கையை வகுத்த லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் தங்கியிருந்த சிறிய இல்லம். ஆம்! அது ஒரு காட்டேஜ்தான். அச் சிறிய குடிலில் உருவில் சிறிய ஆனால் உறுதிகொண்ட உள்ளத்தினரான சாஸ்திரி அவர்கள் சில பொன்னான நாட்கள் தங்கியிருந்து அக் குடிலுக்கும், அந் நகருக்கும் பெருமை தேடித் தந்தார்கள் என்றே சொல்லலாம். சாஸ்திரி அவர்களின் நினைவுச் சின்னமாகவே ஆக்கியுள்ளார்கள் அக் குடிலை அந் நகர் மக்கள். அங்கு சாஸ்திரி அவர்கள் தங்கியிருந்த நாட்களில் தானாகவே உணவு, சப்பாத்தி தயார் செய்துகொள்ள உபயோகித்த பொருட்களெல்லாம் உள்ளன. அப் பெரியார் உயிர் நீத்த அறையினை வண்ணக் கலவையினால் வரையப் பெற்ற அன்னாரை நேரில் பார்ப்பது போன்ற பெரிய படமும், மார்பளவுக்கான திருவுருவச் சிலையும் அலங்கரிக்கின்றன. மாலைகளும், விளக்குகளும் படத்திற்கு உயிரூட்டுகின்றன. சாஸ்திரி அவர்களின் நினைவு அஞ்சலியாக நாங்கள் எடுத்துச் சென்ற மலர்க் கொத்துக்களுடன் எங்கள் கண்ணீரையும் அன்னாரின் கட்டிலில் காணிக்கையாக்கி அவர்கள் சலியாத உழைப்பினையும், தியாகத்தினையும் நினைந்து வெளி வந்தோம்.

அடுத்து அன்று இரவு 7 மணி அளவில் மாஸ்கோ நோக்கிப் புறப்பட்டோம். இங்கு ஒன்று கூற விரும்புகிறேன். விமான நிலையங்கள் (மாஸ்கோவில் கூட) சாதாரணமாக உள்ளன. தாஷ்கண்ட் விமான தளத்தைவிட நம் திருச்சி நிலையம் மேல் என்று கூறலாம். நான் பார்த்தவரை கிழக்கு நாடுகளில் சிங்கப்பூர்

விமான நிலையம் போல் அமைப்பும், அழகும், வசதியும் வேறு எங்கும் இல்லை எனலாம்.

மாஸ்கோவில் எங்களை வரவேற்க இந்தியத் தூதரக அதிகாரிகளும், அமைதிக் குழு உறுப்பினர்களும் விமான நிலையத்திற்கு வந்து அழைத்துச் சென்றனர். இரவு 12 மணி அளவில் மாஸ்கோவிலேயே மிகவும் சிறந்த விடுதியான ஹோட்டல் மாஸ்கோவில் நாங்கள் குடிபுகுந்தோம். இந்த விடுதி பற்றிய சிறப்புக்களை ரஷ்யச் சுற்றுப் பயணக் கட்டுரையில் விரிவாகக் கூறுகிறேன்.

மறுநாள் 20-6-69 ஆம் தேதி மாஸ்கோ நகரினைச் சுற்றிப் பார்ப்பது ஒன்றே எங்கள் அலுவல். சிலர் வேளாண்மைப் பொருட் காட்சியினைக் கண்டு வந்தனர். நாங்கள் மாஸ்கோ நதியில் விசைப் படகில் (Motor Launch) உல்லாசப் பவனி வந்து நகரின் அமைப்பினையும் அழகினையும் கண்டு களித்தோம். நாங்கள் சென்றபொழுது அந்நாடுகளில் வேனிற் காலமாகும். அதனால் படகுப் பவனி சாத்தியமாக இருந்தது. நதியின் நீர் சில்லென்று குளிர்ந்து இருந்தது. பனிக் காலத்தில் இந்நதியின் மேற்பரப்பு பனிக்கட்டி உறைந்து மக்கள் நடந்து செல்லும்படியாக இருக்கும் என்று கேள்விப் பட்டோம்.

அன்று நள்ளிரவு நேரம் மாஸ்கோவிலிருந்து விமானத்தில் கிளம்பினோம். சிறிது நேரத்தில் பெர்லினை அடைந்தோம். சூரிய வெளிச்சம் நன்கு இருந்தது. எனினும், விமான நிலையத்தில் ஆள் நடமாட்டமே கிடையாது. எனக்கு ஒரே வியப்பு. எறும்பு போன்ற சுறுசுறுப்பு மிக்க மக்கள் நிரம்பிய இந்நகரில் பகலில் கூட எல்லோரும் தூங்குவார்களோ என்ற ஐயப்பாடு. பக்கத்திலிருந்தோரை வினவினேன். "என்ன விமான நிலையத்தில் கூட்டத்தையே காணோமே" "ஆம்? இரவு கடந்தால்தான் பரபரப்பாக இருக்கும்" என்றார். அடுத்தவர். 'என்ன? நன்றாக சூரிய ஒளி இருக்கிறது. இன்னும் பொழுது விடியவில்லை என்கிறாரே இவர். ஒரு வேளை'....என்று நினைத்தபடி "மணி என்ன" என்று கேட்டேன். காலை 3 மணி என்று கூறினார்கள். அதன்பின் விசாரித்ததில் ஜெர்மனியில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் திங்கள் 21 ஆம் நாள் கதிரவன் மறைவதே கிடையாதாம். நாள் முழுவதும் இரவும், பகலும் பகலவனின் ஒளிக் கிரணங்கள் நகரைத் தழுவிக் கொள்ளுமாம். மேலும் வேனிற் காலமாகிய மே மாதம் முதல் ஆகஸ்ட் வரை பகற்பொழுது அதிகமென்றும் இரவுப் பொழுது குறைவு என்றும் அறிந்தேன்.

இயற்கையின் விந்தையினை வியந்தபடியே மொழி பெயர்ப்பாளர் வழிகாட்ட நாங்கள் தங்கும் விடுதிக்குச் சென்றோம். பொழுது புலர்ந்தால் சமாதானப் பேரவை மாநாடு. விடிந்தபின் மாநாட்டிற்குச் செல்வோமா?

(தொடரும்)

தலைக்காவிரி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்

அரு. இலக்குவன் பி.ஏ., பி.எல்.

அறப்பணிக்கென்றே தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்கள், "நகரத்தார்கள்" என்பது யாவரும் அறிந்த உண்மை. அத்தகைய அறப்பணிகளின் வரிசையில், மைசூர் மாநிலத்தில் காவிரி உற்பத்தியாகும் இடத்தில் பெரும் பொருட் செலவில் அமைக்கப்பட்டிருக்கும் நகரச் சத்திரமும் ஒன்றாகும். தலைக்காவிரி என்னும் காவிரி உற்பத்தியாகும் திருத்தலம் கடல் மட்டத்திலிருந்து 4187 அடி உயரத்தில் மேற்கு மலைத் தொடரில் அமைந்துள்ளது.

மைசூரிலிருந்து நூற்றுப் பன்னிரண்டு கல் தொலைவில் உள்ள தலைக்காவிரித் திருத்தலத்தின் காவிரி உற்பத்திக் கட்டத்தை அடைவது என்பது சில ஆண்டுகட்கு முன்னர் இயலாத ஒன்றாக இருந்து வந்தது. உற்பத்திக் கட்டத்தை அடைவதற்குச் சில கல் தொலைவு நடந்தே செல்ல வேண்டியதிருந்தது. இருப்பினும் தெய்வ நெறியிலும், இறை வழிபாட்டிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட நம் நகரத்தார் பெருமக்கள் உற்பத்திக் கட்டத்தை அடைய சில கல் தொலைவு நடந்தே சென்று வழிபட்டனர். தவிர, அங்கு தங்கி இளைப்பாறவும் வசதிகள் இல்லாமலிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் நகரத்தார் பெருமக்கட்கென்றே தனி விடுதி வேண்டியதன் அவசியம் வெகுவாக உணரப்பட்டது. பெங்களூரில், கெஞ்சனஹள்ளி என்னுமிடத்தில் ஆசிரமம் நிறுவி அதில் ஆட்சி செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்கள், தலைக்காவிரியில் நகரத்தார்கட்கென்று ஒரு தனிச் சத்திரம் கட்டப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, நகரத்தார்களிடம் தமது எண்ணத்தை வெளிப்படுத்தினார்கள். மைசூர்

மாநிலத்தில் பல்தொழில் நடத்தி வரும் நம் சமூகப் பெருமக்கள், நமது பெரு வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் பொருளை அள்ளி அள்ளிக் கொடுக்க முன்வந்தனர். மைசூர் மாநிலத்தில் தொழில்கள் நடாத்திவரும் நகரத்தார்களின் பொருள் உதவியாலும் ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்களின் நேரடிப் பார்வையாலும், என்றும் அழியாச் சின்னமாக, நகரத்தார்களின் அறவழி வாழ்க்கையை உலகுக்கு எடுத்தியம்பும் வகையிலும் சத்திரம் இன்று முழு வடிவு பெற்று விளங்குகின்றது என்றால் எள்ளளவும் மிகையாகாது. மேற்கண்ட நகரச் சத்திரம் ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்களின் பெரு முயற்சியால் இரண்டுலட்ச ரூபாய் செலவில் கட்டப்பெற்றிருக்கிறது. நகரத்தார்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்கட்கு நகரத்தார்களின் சார்பில் நமது பெருவணக்கத்தை, நகரத்தார்கட்கென்ற தொடங்கப் பெற்ற இந்த ஏட்டின் மூலம் நாம் தெரிவித்துக் கொள்வோமாக.

தலைக்காவிரி நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்தின் அறங்காவலர்களாகக் கீழ் கண்டோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

1. ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்கள் – கெஞ்சனஹள்ளி – பெங்களூர்.

2. தேவகோட்டை திரு. அ. ராம. அ. லெ. அ. முத்துவீரப்ப செட்டியாரவர்கள் நாட்டுக் கோட்டை கன்சர்ன் – மைசூர்.

3. இராயவரம் திரு. ப. வ. ராம. குழந்தையன் செட்டியாரவர்கள் (சம்பங்கி எஸ்டேட்).

4. கோட்டையூர் திரு. க. வீ. அழ. மு. ராம. முத்தையா செட்டியாரவர்கள் (பெரம்புக்கூலி எஸ்டேட்).

5. காரைக்குடி திரு. மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் (அனிவேல் எஸ்டேட்).

6. கோட்டையூர் திரு. அ. க. சித. அள. சிதம்பரம் செட்டியாரவர்கள் (கௌரிபெட்டா எஸ்டேட்ஸ்).

7. புதுவயல் திரு. பெரி. சித. இராமசாமி செட்டியாரவர்கள் (பௌகில்டி எஸ்டேட்).

அந்நாளில் ஆலயங்கள் அமைத்தல், அறச்சாலைகள் நிறுவுதல், வேத பாடசாலைகள் அமைத்தல் முதலிய அறப்பணிகளை மேற்கண்ட நம் சமூகத்தினர், இன்னாளில் பள்ளிகள், கல்லூரிகள் தொடங்குதல், மாணவர்களைப் படிக்க வைத்தல் போன்ற இந்நாளைக் கேற்ற பணிகளைச் செய்துவருதல் நாம் அனைவரும் அறிந்தது. அந்நாளில் ஆலயப் பணிக்காகவும் இந்நாளில்

கல்விப் பணிக்காகவும் நம்மவர் செலவிட்ட பொருள் அளவிடற்கரியது. காலப்போக்கில் நம்மவர்கள் இந் நாளைக்கேற்ற நற்பணிகளில் ஈடுபட்டிருப்பினும், தம் பழைய மரபுகள், கோட்பாடுகள், குறிக்கோள்கள் ஆகியவற்றிலிருந்து சிறிதும் வழுவவில்லை என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, தற்போது பெரும்பொருட் செலவில் எழுப்பப்பெற்றிருக்கும் தலைக்காவிரி நகரச் சத்திரமாகும். மைசூரிலிருந்து 112 கல் தொலைவில் அமைந்துள்ள தலைக்காவிரியை அடைய உன்சூர், மெர்க்காரா, பாகமண்டலம் வழியாகச் செல்லவேண்டும். சிறந்த நெடுஞ்சாலை வசதி உண்டு. காவிரி நதியும், கன்னிகை நதியும் தலைக்காவிரியிலிருந்து ஐந்து கல் தொலைவில் பாகமண்டலம் என்னுமிடத்தில் ஒன்று சேர்கின்றது. அங்கு சிவன் ஆலயமும் உள்ளது. மைசூரிலிருந்து செல்பவர்கள் அனைவரும் காவிரியும் கன்னிகையும் கலக்குமிடத்தில் நீராடி சிவன்கோவில் சென்று வழிபட்டுப் பின்னரே தலைக்காவிரி செல்லுவது வழக்கம்.

நகரச்சத்திரத்தின் திறப்புவிழா சௌமிய ஆண்டு, வைகாசித் திங்கள், இருபத்தேழாம் நாள் திங்கட்கிழமை 9-6-1969 காலை 9-30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்களின் முன்னிலையில் நகரத்தார் வழக்கப்படி சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு நகரத்தார் பெருமக்கள் ஆண்கள், பெண்கள் 300 பேர்களும், குடகு மக்கள் 600 பேரும் வந்து கலந்து மகிழ்ந்தனர். நகரச் சத்திரம் திட்டமிட்ட பொருளுதவியைக் கொண்டு கட்டிமுடிக்க இயலவில்லை. பெங்களூர் கெஞ்சனஹள்ளி கைலாச ஆசிரமத்தினரும், பெரம்புக்கூலி எஸ்டேட் உரிமையாளர்களும் கடனாக ரூ. 75,000/-க்குமேல் அளித்துள்ளனர். அந்தப் பொருளைக் கொண்டு நகரச் சத்திரம் கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. இதனைப் படிக்கும் நகரத்தார் பெருமக்கள் அனைவரும் அவரவர்கள் விருப்பப்படி பொருளுதவி அளிக்க வேண்டுமாய்ப் பணிவன்புடன் வேண்டுகிறேன். பொருளுதவி அனுப்ப வேண்டிய முகவரி: CT. Subramanian Chettiar, Peramboocooly Estate, CHETHALLI P.O., COORG. Mysore State.

காவிரிக்கும், நகரத்தார்கட்கும் எப்போதுமே, அதிகத் தொடர்பு உண்டு. முன்பு நாம் காவிரி கடலோடு கலக்குமிடத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்துவந்தோம். இப்போது காவிரி உற்பத்தியாகுமிடத்தில் அற நிறுவனத்தை அமைத்துள்ளோம். அத்தகைய அற நிறுவனத்தையும், காவிரி தொடங்கும் புண்ணிய தலத்தையும் நாம் ஒவ்வொருவரும் கண்டு களிக்கும் வாய்ப்பினைப் பெறவேண்டும். அத்தகைய வாய்ப்பினை நாம் பெற எல்லாம்வல்ல இறையருளின் திருமலர்ப் பாதங்களை இறைஞ்சி வணங்குவோமாக.

திருச்சிராப்பள்ளி நகரத்தார் சங்கம்

நகரத்தார் சங்கங்களிலேயே முதன் முதலாகத் தோன்றியது திருச்சி நகரத்தார் சங்கம். 20 ஆண்டுகளுக்கு முன்னர் 1949-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற இச் சங்கம்தான், முதன் முதலில் மாணவர்களுக்குக் கல்வி நிதி அளிக்கும் திட்டத்தை மேற்கொண்டு, ஏராளமான நம் சமூக இளைஞர்கள் உயர் கல்வி பெற வாய்ப் பளித்தது. சங்கத்தின் நிதி உதவி பெற்றுக் கல்வி கற்ற பலர் இன்று வாழ்க்கையில் மிக நல்ல நிலையில் உள்ளது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

இவ்வளவு சிறப்புக்களை உடைய திருச்சி நகரத்தார் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் ஒன்று இல்லாதது இதுவரை ஒரு பெரும் குறையாக இருந்தது. காசி முதல் இராமேஸ்வரம் வரை நகர விடுதிகள் அமைத்து, அறப்பணிகள் செய்துள்ள நம் நகரத்தார்கள், செட்டிமார் நாட்டின் மிக அருகில் உள்ள திருச்சியை மட்டிலும் அன்று மறந்தது ஏனோ தெரியவில்லை.

எனினும், கடந்த 7—9—69 ஞாயிற்றுக்கிழமை, திருச்சி ஒத்த மால் தெருவில் நகரத்தார் சங்கத்திற்காக வாங்கப்பெற்றிருக்கும் 2-ஆம் எண் இல்லம் திறந்து வைக்கப்பெற்ற பிறகு, மேற்சொன்ன நீண்ட நாளைய குறையும் நீக்கப்பெற்று விட்டது.

சங்கத்திற்காகக் கட்டிடம் வாங்கும் முயற்சி சென்ற ஆண்டு தொடங்கப்பெற்றது. 15—8—68 அன்று கட்டிட நிதி திரட்டுவதற் காக, 'வெண்ணிற ஆடை' புகழ் நிர்மலா நடன நிகழ்ச்சி நடை பெற்றது.

துடிப்பும் ஆர்வமும் மிக்க சங்க நிர்வாகிகளின் இடையறாத உழைப்பினால் நன்கொடை மூலமும், டிக்கெட் வசூல் மூலமும் சுமார் ரூ. 42,000/– வரை வசூல் செய்யப்பெற்றது.

மேற்படி தொகையில் நகரத்தின் மையமான ஓர் இடத்தில், கோவில்கள், கல்லூரிகள், கடைவீதி ஆகியவற்றுக்கு மிகச் சமீபமாக மேலே குறிப்பிட்ட கட்டிடம் வாங்கப்பெற்றது.

கட்டிடத்தை 7—9—69 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி யளவில் திருச்சி T. S. T. பஸ் கம்பெனி அதிபரும், பல அறப்பணிகள் செய்துள்ள குடும்பத்தைச் சேர்ந்தவருமான திரு. சா. ராம. சித. பழ. பழநியப்ப செட்டியார் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வாழ்த்துரை வழங்கும்போது, ‘‘பல சிறப்புக்களைப் பெற்ற திருச்சி நகரத்தில் நகரத்தார்களுக்கு, ஒரு சொந்தக் கட்டிடம் இல்லாதது இதுவரை ஒரு குறையாகவே இருந்தது. இன்று அக்குறை நீங்கிவிட்டது,’’ எனக் குறிப் பிட்டார்கள்.

மற்றும் ‘சோமலெ’ சென்னை ஐக்கிய சங்கச் செயலாளர் திரு. சுப. சண்முகம், மதுரைச் சங்கச் செயலாளர் திரு. ஆ. விக. தியாக ராசன், சித. சிதம்பரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருச்சி நகரங்களிலும், சுற்றுப்புற நகரங்களிலும் இருந்து ஏராளமான நகரத் தார்களும், ஆச்சிகளும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

கட்டிடத்தைத் தங்கும் விடுதியாக ஆக்குவதற்கு, இன்னும் பொருள் உதவி தேவையிருக்கிறது.

நல்ல மனம் படைத்த நகரத்தார்கள் இக் கட்டிடத்தை, நல்ல தொரு தங்கும் விடுதியாக ஆக்குவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவார்கள் என நம்புகிறோம்.

இறுதியாக, திருச்சி நகரில், நகரத்தார் சங்கக் கட்டிடம் உருவா வதற்கு அயராது உழைத்த சங்க நிர்வாகிகளான தலைவர் திரு. ஆவி. க. ஆவிச்சி செட்டியார், செயலாளர்கள் திரு. எஸ். அண்ணாமலை, எஸ். சுந்தரம், பொருளாளர் திரு. PS. PL. மெய்யப்பன், செயற்குழு உறுப்பினர் திரு. RM. நாராயணன், திரு. RM. கணபதி மற்றும் பல ஆர்வமிக்க இளைஞர்களின் சேவையைக் குறிப்பிடாவிட்டால் இக் கட்டுரை பூர்த்தியாகாது. அவர்கள் அனைவருக்கும், நன்கொடை தந்துதவிய பெரியோர்களுக்கும் எங்கள் நன்றியையும் வணக் கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சேலம் நகரத்தார் சங்கச் செயலாளர் திட்டம்

நகரத்தார் சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள நமது சமூகப் பெருமக்களுக்கு :

நமது சமூகத்தினரிடையே தொன்றுதொட்டு நிலவிவரும், தற்காலத்திற்கு ஒவ்வாத பழக்கவழக்கங்களை அகற்றி, மாற்றங்களைத் தலையாய கொள்கையாகக் கொண்டு பணியாற்றும் வகையாக, ''நகரத்தார் முன்னேற்றச் சங்கம்'' என்ற பொதுப்பெயரில் காரைக்குடி அல்லது செட்டிநாட்டின் முக்கியமான நகர் ஒன்றைத் தலைமையாகக் கொண்டு ஒரு சங்கத்தை அமைக்க வேண்டும். நன்கொடை வசூல் செய்வது அல்லது பொருளுதவி செய்வது என்ற திட்டங்களில்லாமல் இந்தச் சங்கம் செயல்படவேண்டும். பணத் தேவை தவிர்க்கமுடியாத சூழலில், சென்னை, மதுரை, சேலம், கோவை, திருச்சி, ஈரோடு, சிதம்பரம் ஆகிய ஊர்களில் செயல்படும் நகரத்தார் சங்கங்கள், சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கம் ஆகியவற்றின் உதவியை நாடலாம்.

மேற்படி, ''நகரத்தார் முன்னேற்றச் சங்கம்'' தனது கொள்கையாகக் கொள்ளத்தக்க சில கருத்துக்கள் வருமாறு :

1. திருமணங்களில் மாமியார் சாமான் கொடுப்பது—வாங்குவது என்பதை அறவே கைவிட வேண்டும்,

2. திருமணம் மற்ற விழாக்களில் இயன்றளவு சிக்கனமாகச் செலவளிக்க வேண்டும்,

3. செட்டிநாட்டின் 96 வட்டாரங்களிலும் சமூக முன்னேற்றக் கருத்துக்களை அடிக்கடி பிரச்சாரம் செய்தல் வேண்டும்,

4. மணமாகாத இளைஞர்கள்—பெண்கள் பற்றி, விபரங்களைச் சேகரித்து, வேண்டுபவர்களுக்குத் தந்துதவ வேண்டும்,

5. படித்தவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்புகள் வாங்கித்தர வேண்டும்,

6. ஆதரவற்ற நிலையிலுள்ள நம் குலப் பெண்களுக்கு விடுதிகள் ஏற்படுத்தி, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத் தகுந்த தொழில்களை மேற்கொள்ளச் செய்து அதன் மூலம் வாழ்க்கைக்கும் வருமானத்திற்கும் வழிவகை செய்ய வேண்டும்,

7. நம் சமூக இளைஞர்கள் வருமானத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாமலும், நமது பண்பாடு அழியாத வகையிலும், அவர்கள் விரும்பிய நம் சமூகப் பெண்களைத் திருமணம் செய்துகொள்ளத் தூண்டவேண்டும்.

மேற்கண்ட கருத்துக்களுக்கு உடன்பாடுள்ள நம் குடிப் பெருமக்களின் ஆதரவைப் பொறுத்து குறிப்பிட்ட ஊரில் குறிப்பிட்ட ஒரு நாளில் பூர்வாங்கமாக முதற் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யலாம்.

தொன்றுதொட்டுச் சீரும் சிறப்புமாக வாழ்ந்த நமது நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகம் கடைநிலைக்குச் செல்லாமல் கட்டிக் காக்க விழையும் நண்பர்கள் பின்கண்டுள்ள முகவரிக்குத் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

பழ. லெ. பழநியப்பன்
செயலர்,
நகரத்தார் சங்கம்,
10–444, அருணாசல ஆசாரி தெரு,
சேலம்–1.

ஈரோடு நகரத்தார்
சங்க இரண்டாம் ஆண்டுவிழா


10—8—69 ஆம் நாள் ஞாயிறு அன்று சுமார் 4 மணி அளவில் ஈரோடு பெரியார் மன்றத்தில் எங்களின் இரண்டாம் ஆண்டு விழா நிகழ்ச்சி திரு. வி. மு. சுப. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செல்வி, கா. மணிமேகலை 'நிறையுடை மகளிர்' என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றினார்கள். திரு. 'சோமலெ' அவர்கள் 'இனப்பற்றும் இனவெறியும்' என்ற தலைப்பிலே பேசினார்கள். நம் சமுதாயத்தைத் திருத்த இனப்பற்று மட்டும் இருந்தால் போதாது. ஒருவகை இன வெறியும் இன்றைய இளைஞர் களுக்குத்தேவை என்பதைக் குறிப்பிட்டார்கள். நம் சமுதாய இளைஞர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டியது பற்றியும், நம்முடைய விசேடங்களின் சிலவு நடைகள் பெரிதும் குறைக்கப்பட வேண்டியது குறித்தும் குறிப்பிட்டார்கள். தேவை யானால் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு இளைஞர்கள் போராடவும் தயாராக இருக்க வேண்டும் என்றார்கள்.

அடுத்து, மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் 'நாகரிகம் வளர்த்த குடி' என்ற தலைப்பிலே பேசினார்கள். இன்றைய நாகரிக உலகிற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, நாகரிகம் வளர்த்த குடியைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். தாலாட்டுக்களிலிருந்து நம்முடைய சிறப்புக்களையும் குறிப்பிட்டார்கள். இன்றைய நிலைக்கேற்ப நம் தொழில்களையும் மாற்றிக்கொண்டு முன்னேற வேண்டியது பற்றியும் குறிப்பிட்டார்கள்.


அடுத்துப் பேசிய சேலம் நகரத்தார் சங்கச் செயலாளர் திரு. பழனியப்ப செட்டியார் அவர்கள் சங்கங்கள் செயல்பட வேண்டியது குறித்தும், சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கம் செயல்பட ஆவன செய்ய வேண்டியது பற்றியும் குறிப்பிட்டார்கள். பெண் கல்வியால் தான் சமுதாயம் சீர்பெற முடியும். எனவே ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளோரும் பெண் கல்வி பற்றி அலட்சியமாக இருக்காமல் பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவு பெற்றது.



திருமதி எஆர். மீனாட்சி



திரு. நாக. அண்ணாமலை



திரு. என். சுப்பிரமணியம்

தென்னார்க்காடு நகரத்தார் சங்கச் சிறப்பு விருந்தினர்கள்

தில்லையின் எல்லையிலே அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைக் கண்டுதான் இறைவன் ஆனந்தக் கூத்தாடுகிறார் என்று கவிமணி பாமாலை தொடுத்தார். தென்னார்க்காடு மாவட்டத்தின் உயர்விற்கும் சிறப்பிற்கும் ஒப்பற்ற கலன்கரை விளக்கமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் திகழ்கின்றது என்றால் மிகையாகுமோ? அம்மாவட்டத்தின் சிறப்பிற்கோர் சிறப்பாக உருவாகியுள்ள தென்னார்க்காடு நகரத்தார் சங்கம் அண்மையில் ஆராய்ச்சிக் கல்விக்காக வெளிநாடு சென்ற உயர்வுமிக்க மூவரைச் சிறப்பு விருந்தினர்களாகக் கொண்டு பாராட்டிச் சிறப்பித்தது.

சிறப்புப் பெற்றவர்கள் :

திருமதி கற்பக கணபதி, திரு. நாக. அண்ணுமலை, திரு. என். சுப்பிரமணியம்.

சிதம்பரம் கீழவீதி மெ. செ. பாடசாலையில் வழியனுப்பு விழாக் கூட்டம் நடைபெற்றது. பேராசிரியர் திரு. பிஎல். இராமசாமி அவர்கள் தலைமைவகிக்க, சங்கச் செயலாளர் திரு. திண்ணப்பன் அவர்கள், பேராசிரியர் திரு. ஆர்எம். சேதுநாராயணன் அவர்கள், திரு. விஆர். முத்து வீரப்பன் அவர்கள், திரு. ஏஆர். லெட்சுமணன் அவர்கள் ஆகியோர் வெளிநாடு செல்ல இருக்கும் நண்பர்களை வாழ்த்திச் சிறப்பித்தார்கள். தலைவர் அவர்கள் நல்லுரை கூற விருந்தினரின் பதிலுரை, நன்றி உரையுடன் விழா இனிது நிறைவேறியது.

சிறப்பு விருந்தினர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டாமோ ?

திருமதி ஏஆர். மீனுட்சி கற்பக கணபதி அவர்கள் நற்சாந்துபட்டியைச் சேர்ந்தவர்கள். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் உயிரியல் துறையில் பணிபுரிகின்ற பெரி. கற்பக கணபதி அவர்களின் துணைவியார். பனையப்பட்டி சி. மு. மு. அரு. அருணுசலம் செட்டியார் அவர்களின் புதல்வியார்.

பி. எஸ்சி. கல்வியினை மதுரைப் பாத்திமாக் கல்லூரியில் கற்றுச் சிறப்புமிக்கத் (Distinction) தேர்வினைப் பெற்ற இவர்கள் எம். எஸ்சி., கல்வியினை திருச்சி சீதாலட்சுமி கல்லூரியில் கற்று முதல் வகுப்பில் தேர்வு பெற்ருர்கள்—கணக்கியல் துறையில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றறை ஆண்டு ஆராய்ச்சிக் கல்வியினை மேற்கொண்ட இவர்கள் அப் பல்கலைக்கழகத்தில் அத்துறையிலேயே பணியாற்றி வருகின்ருர்கள்.

கணக்கியல் மேற்கல்விக்காக இவர்கள் இப்பொழுது சென்றுள்ள இடம் கானடாநாட்டில் ஒன்டேரியா மாநிலத்தில் உள்ள வாட்டர்லூ பல்கலைக் கழகம் (Waterloo University).

திரு. நாக. அண்ணுமலை அவர்கள் சண்முகநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள். தந்தையார், சங்கத்து நாகப்ப செட்டியார் அவர்கள்.

உயர்நிலைக் கல்வியை காரைக்குடி நகராண்மைக் கழகப் பள்ளியிலும் இடைநிலைக் கல்வியை அழகப்பா கல்லூரியிலும் கற்ற இவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் (B. E. Electrical) கல்வியில் முதல் வகுப்பில் தேர்வு பெற்று எம். டெக். (M. Tech) கல்வியினை இந்தியப் பொறியியல் கழகத்தில் (கரக்பூர்) (Indian Institute of Technology, Kharagpur) (1963 ஆண்டு) கற்றுத் தேர்ந்தார்கள். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல்துறையில் பணியாற்றிவருகின்ற இவர்கள், 1966ஆம் ஆண்டு முதல் ரீடராகப் பணியாற்றி வருகிருர்கள். இப்பொழுது பொறியியல் மின்னியல் பிரிவில் பி. எச்டி. ஆராய்ச்சிப் பட்டத்தினைப் பெற பர்ன்ஸ்விக் (Burnswick) அருகில் உள்ள ரட்கர் பல்கலைக்கழகத்திற்குச் (Rutger University) சென்றுள்ளார்கள்.

திரு. என். சுப்பிரமணியம் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் வெற்றியூரைச் சேர்ந்தவர்கள். திரு. அரு. கதி. நாராயணன் செட்டியார் அவர்களின் புதல்வர்.

ஆங்கிலத்தில் எம். ஏ. கல்வியில் முதல் வகுப்பில் (அண்ணுமலைப் பல்கலைக் கழகம்) தேர்வு பெற்ற இவர்கள் 1959—60ஆம் ஆண்டில் மதுரை தியாகராசர் கல்லூரியில் பணிபுரிந்துள்ளார்கள். 1960ஆம் ஆண்டு முதல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில மொழி விரிவுரையாளராகப் பணிபுரிந்துவருகிருர்கள்.


தென் கிழக்கு ஆசிய பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் பிலிப்பைன்ஸ் நாட்டின் உதவித் தொகையினைப் பெற்று பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் 1962—63ஆம் ஆண்டு ஒப்புநோக்கு இலக்கிய ஆராய்ச்சியினை (Comparative Literature) மேற்கொண்ட இவர்கள் பிரஞ்சுமொழி டிப்ளமோவும் மொழியியல் துறையில் சான்றிதழும் பெற்றுள்ளார்கள்.

அமெரிக்க இலக்கியம் பற்றிய ஆராய்ச்சியினை மூன்று ஆண்டுகள் மேற்கொள்வதற்காக கலிபோர்னியாவில் உள்ள சாண்டியாகோ மாநிலக் கல்லூரிக்குச் (San Diego State College, San Diego, California, U. S. A) சென்றுள்ளார்கள்.

செய்தி மலர்

● சில நகரங்களை எண்ணுகிறபொழுது கோயில்கள் நினைவுக்கு வரும். சில நகரங்களை நினைக்கிறபொழுது கல்லூரிகள் நினைவுக்கு வரும். வேறு சில நகரங்களை நினைக்கிறபொழுது சங்கங்களும் கழகங்களும் நினைவுக்கு வரும். பின்னே சொன்ன வகை நகரங்களில் ஒன்று காரைக்குடி. அந்த ஊரை நினைத்தவுடன் கம்பர் விழாவும் குறள் விழாவும் நினைவுக்கு வரும். கவி உலகப் பெரும்புலவர் கம்பருக்கு விழா கொண்டாடுவது போலவே தமிழ்ப் பெருங்குடி மக்களின் தலை மகனை திருவள்ளுவருக்கும் தொடர்ந்து விழா கொண்டாடி வரும் காரைக்குடி நகர், நம் வாழ்த்திற்கும் வணக்கத்திற்கும் உரியது. கடந்த 17 ஆண்டுகளாக திருக்குறட் கழகத்தார், குறள் விழாவினை சீரோடும் சிறப்போடும் நடத்தி வருகிறார்கள். இந்த ஆண்டு குறள் விழா இரட்டைச் சிறப்போடு நடைபெற்றது.

ஒன்று, 17 ஆம் ஆண்டு விழா, இரண்டு, திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழாவாகவும் அது நடைபெற்றது. விழா மூன்று நாட்கள் நடைபெற்றது. கவியரங்கம், பேரவை, பட்டிமன்றம் என்ற பெரும் பிரிவுகளைக் கொண்டு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



அரு. இலக்குவன்

நிகழ்ச்சிகளில் தமிழக அமைச்சர் மாண்புமிகு எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்களும், மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்களும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் தமிழ் கடல் சிவமணி. ராய. சொ. அவர்களும் முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் மற்றும் பல பேரறிஞர்களும் கலந்து கொண்டு உரையாற்றிச் சிறப்பித்தார்கள். திருக்குறட் கழகத்தின் செயலாளராக அரு. இலக்குவன் அவர்கள் இருந்து அயராது உழைத்து, தளராது பணிபுரிந்து வருகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியது ஆகும்.

● பேராசிரியர் லெ ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுடைய மகள் திருவளர் செல்வி விசாலாட்சிக்கும் ஆ. தெக்கூர் ஆர். எம். ஏ. என். மாணிக்கம் செட்டியாரவர்கள் மகன் திருவளர் செல்வன் சுந்தரம் B. Sc க்கும் செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி நெற்குப்பையில் மணமகள் இல்லத்தில் திருமணம் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. பலதுறைப் பெருமக்களும் வந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தார்கள்.

● ஈகிள் டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில், லாரிகள் போக்குவரத்து நிறுவனம் ஒன்று அண்மையில் தொடங்கப் பெற்றுள்ளது. இதன் நிர்வாக இயக்குநர், பள்ளத்தூர் சு. சொ. குடும்பத்தினைச் சேர்ந்த திரு. எஸ். எஸ். பழநியப்ப செட்டியார் அவர்கள். நிறுவனத்தின் தலைமை அலுவலகம் 67, அரண்மனைக்காரத் தெருவில் உள்ளது. இதன் கிளைகள் ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களில் உள்ள முக்கி மான நகரங்களில் திறக்கப்பெற்றுள்ளன.

● பள்ளத்தூர் ராம. ப. மு. சபாரத்தினம் செட்டியார் மகன் திருவளர் செல்வன் பழநியப்பனுக்கும் நேமத்தான்பட்டி பழ. பெரிய கருப்பன் செட்டியார் மகள் திருவளர் செல்வி வள்ளியம்மைக்கும் சௌமிய ஆண்டு ஆவணித் திங்கள் 22-ஆம் நாள் சீரோடும் சிறப்போடும் திருமணம் நடைபெற்றது.

● சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி வரும் தேவகோட்டை அரு. இலக்குவன் பி. ஏ., பி. எல். அவர்கள் சென்னை அடையாறு காந்திநகர் மூன்றுவது மெயின் ரோடு 44ஆம் எண் இல்லத்தினை வாங்கி அண்மையில் அங்கு குடியேறியுள்ளார்கள்.

மனைபுகு விழாவிற்கு, தமிழக உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மேன்மைமிகு கே. வீராசுவாமி அவர்கள் வந்திருந்து மங்கல விளக்கினை ஏற்றிச் சிறப்பித்தார்கள்.

விழாவில் வழக்கறிஞர்கள் பலரும் உறவினர்களும் கலந்து கொண்டார்கள்.

திருமுகம்

நம்மவர்கள் சார்பில் வெளிவரும் 'நகரத்தார்' இதழ் கண்டேன். இதழ்கள் இல்லத்திற்கு வந்ததும் வார இதழ்களைப் போட்டி போட்டுக் கொண்டு நான் முந்தி நீ முந்தி என்று படிப்பது போன்று நம்மவர்கள் படித்து வரும் நிலையினைக் கண்டேன்.

நம் பெண்கள் நிலை உயர நம்மவர்களின் நகரந்தோறும் 'நகரத்தார் மகளிர் மன்றம், என்ற ஒன்றை ஏற்படுத்திப் படித்த பெண்கள் வயது முதிர்ந்தவர்களிடம் நம் தற்போதைய நிலையை எடுத்துக் கூறி, சிக்கனத்தைக் கடைப்பிடித்து, வருவாயைப் பெருக்கும் முறையை எடுத்துக் கூறும் வண்ணம் அமைத்தல் வேண்டும். பெட்டி, தடுக்குகள் முடைதல், எம்பிராய்டரி வேலைகள் செய்தல் முதலிய தொழில்களில் நம்மவர்களின் திறமை மதிப்பிடற்கரியது, அவர்களுக்கு நம் சங்கங்களிலிருந்து பணவுதவி செய்து திரும்பப் பெற்றுக் கொள்ளும்படியும் செய்யலாம். மதுரை நகரத்தார் சங்கம் சில ஊர்களுக்குத் தையல் மிஷின்களைக் கொடுத்துதவி நம் பெண்கள் அவ் வேலையைக் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறது.

பெண்கள் உயர் கல்வி கற்றால் திருமணம் செய்து கொடுக்கச் சிரமம் வரும் என்ற நிலையினைப் போக்க நம்மவர்களில் ஆண் பெண் படித்தவர்களின் ஊர், பெயர், விலாசம், பட்டம், தற்பொழுது இருக்குமிடம் ஆகியவற்றை மாதந்தோறும் இரண்டு மூன்று பக்கங்களில் வெளியிடலாம். படித்தவர்களின் பட்டியலைத் தயார் செய்ய ஊருக்கு ஒருவரை நியமித்து அவரது ஆதரவைப் பெறலாம்.

செய்தி மலரில் நம்மவர்களில் உயர் கல்வி பெற்றவர்களைப் பற்றி வெளியிடுவது நல்ல முயற்சி ஆகும். நம் இளைஞர்களுக்கு நாமும் அம் மாதிரி மேல் நிலையை அடைய வேண்டும் என்ற எண்ணம் உண்டாவது உறுதி. நம் சமூகத்துக்காக உழைப்பவர்கள், பக்தி மார்க்கத்தில் நல்ல வழியைக் கடைப்பிடித்து மேல் நிலையை அடைந்தோர், ஆசிரியதி

தொழில், பருத்துவத்தொழில், நீதித்துறை, பொறியியல் துறை, ஆகிய மேற்படி துறைகளில் உள்ளோர் ஆகியவர்களைப் பற்றி (வயது, ஊர், தற்பொழுது இருக்குமிடம், பெற்ற பட்டங்கள், சிறப்புக்கள்) வெளியிடலாம்.

ஏ. ஆர். அருணாசலம் பி. காம்.
11, ஆலம்பட்டார் தெரு,
தேவகோட்டை.

நகரத்தார் என்ற இதழினைச் சமீபத்தில் கண்டேன், எங்களைப் போல நம் பகுதியிலிருந்து தனித்து நிற்கும் அன்பர்களுக்கு நம் பகுதியின் தொடர்பினை ஏற்படுத்துவதோடு நம்மவர்களின் பெருமையினையும் உணர்த்தக் கூடியதாக இருக்கின்றது. என் ஆர்வமிக்க நல்வாழ்த்துக்களை உரிமையாக்குகின்றேன்.

எஸ். எம் இராமலிங்கம்
திருவாலம்பொழில்,
தஞ்சை மாவட்டம்.

வீட்டுக்குள்ளேயே பொழுதைக் கழிக்கும் எங்களுக்குத் தங்கள் இதழில் ஒரு போட்டி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். பல துறையிலும் பிற இனத்துப் பெண்களைப் போல முன்னேற வேண்டும் என்ற ஆவல் எங்களுக்கு இருக்கிறது. வழிதான் தேவை? கூறுங்களேன்.

சித. உமையாள்
லக்ஷ்மி பவனம்,
பள்ளத்தூர்.

தென்னார்க்காடு மாவட்டமும் நகரத்தாரும் கட்டுரை பயன் மிகுந்தது—மறைந்து வருகின்ற நமது பெருமை மிக்க வரலாற்றை மிகச் செம்மையான முறையில் உருவாக்கித் தந்த திண்ணப்பருக்கு நன்றி!

லெ. தேனப்பன்
கடலூர்.

தென்னார்க்காடு மாவட்டமும் நகரத்தாரும் என்ற கட்டுரையில், கா. குப. குடும்பம் என்று குறிப்பிட்டிருப்பது சரியில்லை. க. ப. குடும்பம் என்றிருக்க வேண்டும். சிதம்பரத்தில் தேவகோட்டையார் நகர விடுதி ஒன்று இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே! அது அனைத்து நகரத்தார் பொது விடுதியேயாகும்.

சொ. மு. சு. மெ. அரு. ராமசாமிச் செட்டியார்
பள்ளத்தூர்.

சென்னை-14. நாவல் ஆர்ட் பிரிண்டர்சில் அச்சிடப்பெற்று, சேது நிலையத்திற்காக வெளியிடுபவர் பழ. சேது ஆச்சி, 12. இராமாநுசம் தெரு. சென்னை-17. தமிழ்நாடு.
ஆசிரியர் : புலவர் நாகசண்முகம்.